விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 12 வியாழக்கிழமை (26.06.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 189

# ஐ.நா. விசாரணைக் குழுவின் வல்லுநர்கள் விபரம் அறிவிப்பு

## நவநீதம்பிள்ளை வெளியிட்டார்

(ஜெனிவா)

**இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து முழுமையான விசாரணைகளுக்கு ஆலோசனை வழங்கவுள்ள மூன்று வல்லுநர்களின் பெயர்களை ஐ.நா. அறிவித்துள்ளது.**

சமாதானத்துக்கான நோபல்பரிசை வென்றுள்ளவரும், பின்லாந்து அரசின் முன்னாள் அதிபருமான மார்ட்டி அத்திசாரி, நியூசிலாந்தின் முன்னாள் கவர்னர் ஜெனரல் சில்வியா கார்ட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கீர் ஆகியோரே அந்த மூன்று வல்லுநர்கள். இந்த ஆண்டு மார்ச் மாதம், இலங்கைக்கு எதிராக 20ஆம் பக்கம் பார்க்க....







## கொடிகாமத்தில் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொடிகாமம், கெற்பேலி மேற்குப் பகுதியில் வெற்றுக் காணி ஒன்றில் புதைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் நேற்றுக்காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. 6 கைக்குண்டுகள், மகசீன் ஒன்று, 20ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கின் பொருளாதாரத்துக்கு இராணுவம் பங்கம் விளைவிக்கிறது

### சுவிஸ் தூதுவருக்கு முதலமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கும் - கிழக்கும் தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக்களின் இடங்களாக இருக்கவில்லை என்ற கருத்தை உருவாக்க இராணுவத்தினரின் துணையுடன் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன.

வடக்கு மாகாணத்தில் பொது மக்களின் வாழ்க்கைக்கும், பொருளாதாரத்திற்கும் இராணுவம் பங்கம் விளைவிக்கின்றது. உள்ளிட்ட பல விடயங்களை இலங்கைக்கான சுவிஸ்சர்லாந்து தூதுவருடனான சந்திப்பின் போது வடக்கு 20ஆம் பக்கம் பார்க்க....

## இந்தியதூதுவர் நியமனம்

(கொழும்பு)

பேராசிரியர் சுதர்ஷன் செனவிரட்ன இந்தியாவுக்கான புதிய இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராக பணியாற்றிய பிரசாத் காரியவசம் அமெரிக்காவுககான இலங் 20ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் சிக்கி குடும்பப் பெண் பலி

(முல்லைத்தீவு)

வீதிக்கு குறுக்கே மாடு பாய்ந்ததால் வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று எதிரே வந்த மோட்டார்சைக்கிளுடன் மோதுண்டதில் அதில் பயணித்த 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.45 மணியளவில் முல்லைத்தீவு நகரப் பகுதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள முல்லைத்தீவு ஏ-34 மாங்குள வீதியில் 20ஆம் பக்கம் பார்க்க....

### வடக்கு மாகாண சபை

## ஆளும் உறுப்பினர்கள் மூவரின் பொலிஸ் பாதுகாப்பு நீக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் ஆளும் கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மூவருக்கு வழங்கப்பட்டு வந்த தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பினை விலககுவதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸமா அதிபர் நேற்று கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன்(எழிலன்), பாலச்சந்திரன் கஜதீபன், சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோருக்கே நேற்று நண்பகல் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை தனிப்பட்ட பொலிஸார் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் தனக்கு இலலை என்றும் மேலதிகமாக பாதுகாப்பு தேவையெனக்கருதினால் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொள்ளுமாறும் அக்கடிதத்தில் றொஹான் டயஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 13 ஆம் திகதியே மாகாணசபை உறுப்பினர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் நேற்றுடன் அந்தப்பாதுகாப்பும் விலக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அச்சுறுத்தல்கள் 19ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா.விசாரணைக் குழுவின் ஆலோசகர் புலி ஆதரவாளர்

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவின் ஆலோசகராக நியமிக்கப்பட்டவர தமிழீழ விடுதலைப் புலிகளின ஆதரவாளர் என சிங்களப் பத்திரிகையொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கை தொடர்பான விசாரணைக்குழுவின ஆலோசகர்களில் ஒருவராக பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதி மராட்டி அத்திசாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொசோவாவை தனி நாடாக பிரகடனம் செய்வதற்கான ஏற்பாடுகளை அத்திசாரியே மேற்கொண்டிருந்தார். வன்னிப் போர் இடம்பெற்ற காலத்தில் அத்திசாரி இலங்கைக்கு விஜயம் செய்து போரை நிறுத்த முயற்சித்தார்.

இலங்கை தொடர்பான விசாரணைக்குழுவின் ஆலோசகர்களாக நியூசிலாந்தின் சில்வியா கட்ரைட் மற்றும் பின்லாந்தின் அத்திசாரி ஆகியோர் கடமையாற்றவுள்ளதாக சிங்களப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

## வட்டரக்க விஜித தேரர் விளக்கமறியலில்

(கொழும்பு)

ஜாதிக பல சேனா இயக்கத்தின் தலைவர் வட்டரக்க விஜித தேரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் அடைக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஜூலை மாதம் 2-ம திகதி வரையில் வட்டரக்க விஜித தேரரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடத்தி தாக்கியதாக போலிக் குற்றச்சாட்டு சுமத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் வட்டரக்க விஜித தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த விஜிததேரர், வைத்தியசாலையிலி 19ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மக்களின் நலன்களுக்கான அரசிடம் உதவி கோருங்கள்

## யாழ்.மாநகர முதல்வர் பதிலடி

(யாழ்ப்பாணம்)

வாகனக் கொள்வனவுக்காக மத்திய அரசிடம் உதவிகளைக்கோருபவர்கள் மக்களின் நலனுக்காகவும் மத்திய அரசிடம் உதவிகளைக் கோரலாமே என்று யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கேள்வியெழுப்பியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணசபையின் பேரவைச்செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்சந்திப்பின்போது மாகாணசபையின் செயற்பாடுகள் குறித்தும் வாகனக் கொள்வனவு குறித்தும் யாழ்.மாநகரசபை முதல்வர் மேடைப்பேச்சுக்களில் முன்வைத்து வந்த குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்ததோடு முதல்வர் மீதும் சரமாரியாக குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தார்.

இந்நிலையில் அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தின் குற்றச்சாட்டுக்கள் குறித்து நேற்றைய தினம் கேட்ட போது யாழ்.மாநகர சபை முதல்வர் மேலும் தெரிவிக்கையில், தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாடாளுமன்ற தெரிவிற்குழுவிற்கு போகமறுக்கின்ற கூட்டமைப்பினர் வாகன வரிவிலக்கிற்காக அரசிடம்கையேந்திப் போவது ஏன் என கேள்வி எழுப்பினார்.

வடக்கு மாகாணசபையை யாரும் விமர்சிக்கவில்லை. ஆனால் மாகாணசபையினரின் சுயநலப் போக்கைத்தான் விமர்சித்ததாகவும் தெரிவித்தார்.

விமர்சனங்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதேவேளை விமர்சித்ததற்காக இழிவுபடுத்தக் கூடாதென்றும் இத்தகைய இழிவுபடுத்தல்களை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமுடியாதென்றும் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

அரசவாகனம் பற்றிநான் பேசவில்லை. மாறாக வரிவிலக்குவாகனம் பற்றித்தான் பேசியிருந்தேன். அதாவது சட்டதிட்டங்களுக்கு அமைய இரண்டரை வருடங்கள் முடிவடைந்த பின்னரேவாகனங்களுக்கு வரிவிலக்கைப் பெற்றுக் கொள்ளமுடியுமென்று இருக்கின்றது.

அதற்குமுன்னராகவே முன்னுரிமை அடிப்படையில் தமக்கு வரிவிலக்கை வழங்குமாறு கூட்டமைப்பினர் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இதற்கமையசபையின் 22 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு தமக்கு வரிவிலக்கை வழங்குமாறு அவைத் தலைவரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து முதலமைச்சரின் அனுமதியுடன் இந்தக் கோரிக்கை ஜனாதிபதியிடமும் விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஆகவேதான் நாம் கேட்கவிரும்புவது யாதெனில் தெரிவுக் குழுவிற்குவருமாறு ஜனாதிபதி தொடர்ந்தும் அழைத்துவரும் நிலையில் இதற்குச் செல்லமுடியாதென்றும் நம்பிக்கை இல்லை என்றும் கூறிவருகின்றீர்கள். அப்படியானால் உங்களுடைய சுயநலன்களுக்காக எந்த நம்பிக்கையுடன் செல்கின்றீர்கள்?.

இவ்வாறு சுயநலன்களுக்காக அரசிடம் செல்வது போன்று பொதுமக்கள் நலன்களுக்காகவும் அரசிடம் சென்று உதவிகளைப் பெறுக் கொள்ளலாமே. அவ்வாறுபெற்றுக் கொண்டால் மக்களுக்காவது பல்வேறு உதவிகளையும் வழங்கக்கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாண சபை தொடர்பில் விமர்சிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களையும் நிராகரித்துள்ள முதல்வர் மகாணசபையின் சுயநலன்களையே விமர்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பெரிய உயரியசபை ஏனைய சபைகளுக்குகற்றுத் தருகின்ற சபையாகவே விளங்க வேண்டும் என்று முதல்வர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-6)

# இலங்கைத் தமிழர் கனடாவில் கொலை

(மொன்றியல்)

கனடாவின் மொன்றியல் பிராந்தியத்தில இலங்கைத் தமிழர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

40 வயதான ஜெயராசன் மாணிக்கராஜா என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக 34 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் 7745 மவுண்டன் சைட் பகுதிக்கு சற்று வடக்கில் உள்ள பார்ரோ பிரதேசத்தில் கோட்டஸ் நெகேஸ் என்ற பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு 9.30 அளவில் இடம்பெற்றுள்ளது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான மாணிக்கராஜா உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்துள்ளார். அவர் படுகாயமடைந்த நிலையில், உணவகத்திற்கு அருகில் உள்ள வீதி ஒன்றில் கிடந்த நிலையில், வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார். அவரது கழுத்து பகுதியில் கத்தியால் தாக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டுள்ளன.

அருகில் உள்ள தொடர்மாடி வீடமைப்பு கட்டிடத்தை சுற்றிவளைத்த பொலிஸார், கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரை கைது செய்தனர்.

முக்கோண காதல் இந்த கொலை சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாம் என பொலிஸார் நம்புகின்றனர்.

தனது தந்தையை ஒருவர் கட்டிடத்திற்கு கீழே அழைத்து வந்து மலை பகுதிக்கு இழுத்துச் சென்றதை தான் கண்டதாக கொலை செய்யப்பட்டவரின் மகனான அபிசாத் மாணிக்கராஜா மொன்றியல் ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார்.

கொல்லப்பட்ட மாணிக்கராஜா மற்றும் கொலைச் சந்தேக நபர் ஆகியோர் மொன்றியலில் உள்ள இலங்கை சமூகத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கொலை செய்யப்பட்டவரின் சகோதரரும் அதே பிரதேசத்திலேயே வசித்து வருகின்றார்.

2000 ஆம் கனடாவுக்கு அகதியாக வந்த தமது தந்தை ஒரு நட்பாக பழகும் குணம் கொண்டவர் என அவரது மகள் கூறியுள்ளார்.

தொடர்மாடி குடியிருப்பில் அடுத்த வீட்டில் வசித்து வந்த 34 வயதான சந்தேக நபர், தனது இளம் மகளுடன் அமைதியாக வசித்து வந்தவர் என அயலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை மொன்றியல் தீவில் 2014 இல் இடம்பெற்றுள்ள 13 ஆவது கொலையுடன் உள்ள தொடர்புபற்றி சந்தேகநபரிடம் பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.

சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் மொன்றியல் பொலிஸார், இந்த வாரம் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளதாக மொன்றியல் பொலிஸின் ஊடக தொடர்பு அதிகாரி பிரான்ஸ்கொஸ்ஸ் கொல்லார்ட் தெரிவித்துள்ளார். (எ-11)

# சுவிட்சர்லாந்து தூதுவருக்கு சீ.வீ.கே நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற யுத்த வெற்றி விழா நிகழ்வுகளில் கலந்து கொள்ளாத சுவிட்சர்லாந்து நாட்டு தூதுவருக்கு தமிழ் மக்கள் சார்பாக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் நன்றி தெரிவித்தார்.

யுத்தத்திற்கு பின்னர் வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் அறிந்து கொள்ளும் நோக்குடன் இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் தோமஸ் லிட்செர் உள்ளிட்ட குழுவினர் நேற்று காலை யாழ். மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இவ்வாறு விஜயம் மேற்கொண்டவர்கள் காலை 11 மணிக்கு வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தை சந்தித்து கலந்துரையாடினர். அதன்போதே தூதுவருக்கு நன்றி தெரிவித்தார்.

அதன்படி 2009 ஆம் ஆண்டு பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு நாட்டில் சுதந்திரம் உருவாக்கப்பட்டுள்ளதாக அரசினால் அறிவிக்கப்பட்டு 5ஆம் ஆண்டு யுத்த வெற்றியினை கொண்டாடும் நிகழ்வு இம்முறை அம்பாந்தோட்டையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்விற்கு அனைத்து நாட்டு தலைவர்களும் அழைக்கப்பட்டு இருந்தது. எனினும் கனடா மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய இருநாடுகளும் வெற்றி விழா நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை.

அதனையடுத்து நேற்றைய சந்திப்பில் கலந்துகொண்ட சுவிஸ் தூதுவருக்கு குறித்த விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளதுடன் அதற்காக தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்திருந்தார். (எ-6)

## ஒபாமாவைச் சந்திப்பார் புதிய தூதுவர்

அமெரிக்காவுக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம், அந்நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்திக்கவுள்ளார்.

அமெரிக்கா, வாஷிங்டனில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் இந்தச் செய்தியினை வெளியிட்டுள்ளது.

இந்த சந்திப்பு எதிர்வரும் யூலை 14-ம் திகதி வெள்ளை மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இந்தியாவுக்கான இலங்கையின் தூதுவராகக் கடமையாற்றிய பிரசாத் காரியவசம் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராக கடந்த வாரம் நியமிக்கப்பட்டார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் தன்னுடைய நியமனப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அமெரிக்க ஜனாதிபதியை சந்திக்கவுள்ளார். (எ-11)

## நயினை நாகபூஷணிக்கு சனியன்று கொடி



(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 28ம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஜூலை மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறு நாள் சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், ஜூலை 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தெப்பத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (எ-11)

விற்பனையாளர் தேவை
யாழ்.நகரில் இயங்கும் பிடவை கடைக்கு அனுபவம் உள்ள ஆண்/பெண் விற்பனையாளர் தேவை.
0777035457
(6953)

வாழ்க்கையில் வெறுப்பா?
பிரச்சினை எதுவானாலும், எம்முடன் தொலைபேசியில் அல்லது நேரில் பேசுங்கள். இரகசியங்களைப் பேணுவோம்
காலை 9.00 - பி.ப 1.00
கைகொடுக்கும் நண்பர்கள்
104,4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
021 222 8117
(C-7745)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு
0213210815, 0215671532
valampurii@yahoo.com

தொடர்ந்தும் உங்கள் சேவையில்....
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-7744)

## மரண அறிவித்தல்



### அமரர் வஸ்ரியாம்பிள்ளை அருளானந்தம் (ராசா)

நவாலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வஸ்ரியாம்பிள்ளை அருளானந்தம் (ராசா) அவர்கள் நேற்று (25.06.2014) புதன்கிழமை காலமானார். அன்னாரது நல்லடக்க ஆராதனைத் திருப்பலி இன்று (26.06.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் அன்னாரது பூதவுடல் நவாலி கல்லுண்டாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

(C-7749)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருட கால எதிர்ப்பு அரசியலால் நாம் எதனையும் சாதிக்கவில்லை

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



இந்திய இராணுவம் முல்லைத் தீவு காட்டுப் பகுதியை சுற்றிவளைத்த போது 40 மட்டக்களப்பு போராளிகளுடன் சென்று முற்றுகையை உடைத்து விடுதலைப்புலிகளின் தலைவரை காப்பாற்றிய நாங்கள் இன்று துரோகிகள்.

அன்று இந்திய இராணுவத்துடன் சேர்ந்து எமது இளைஞர்களைக் கொன்றவர்கள் தேசிய வாதிகளாக்கப்பட்டுள்ளதாக மீள் குடியேற்ற பிரதியமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடம் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட 75 குடும்பங்களுக்கான சுமார் 15ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

நாங்கள் கடந்த 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகம். எமது சமூகத்தினை கட்டியெழுப்ப வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. அந்தப் பொறுப்பில் இருந்து நாங்கள் விலகிச் செல்ல முடியாது. சமூகம் பாதிக்கப்படும் நிலையில் இருந்து விடுவிக்க அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க வேண்டியது அனைவரது கடமையுமாகும்.

இன்று முஸ்லிம்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது அங்கிருந்து எந்த முஸ்லிம் அமைச்சரும் அரசாங்கத்தினை விட்டுச் செல்லவில்லை. அவர்கள் தங்களது இனத்துக்கு ஏற்பட்ட அநீதிகளுக்காக அரசாங்கத்துக்குள் இருந்து கடுமையாக குரல் கொடுத்து வருகின்றனர். அரசாங்கத்துடன் சண்டை செய்கின்றனர்.

நாங்கள் அரசாங்கத்துக்குள் இருக்கும் போது எமக்கு தேவையானவற்றை பெற்றுக் கொள்ளலாம். அதேபோன்று சமூகத்துக்கு பாதகமான விளைவுகள் ஏற்படும் போது அரசாங்கத்துக்குள் இருந்தே குரல் கொடுக்கலாம்.

ஆனால் நாங்கள் எதிர்ப்பு அரசியலை செய்து கொண்டு எவற்றையும் அடைய முடியாது. எமது சமூகத்தினை இன்னும் கீழ் நிலைக்கு கொண்டு செல்வதால் நாங்கள் இன்னும் பின்னோக்கியே நகர்த்தப்படுவோம்.

இப்பகுதியில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளேன்.

கடந்த 30 வருட கால எதிர்ப்பு அரசியல் காரணமாக நாங்கள் எதனையும் பெறவில்லை. எமது உரிமைகளை, கல்வி நிலையை நாங்கள் காப்பாற்ற வேண்டும்.

இன்று தான் எமது மக்கள் வாழ்கின்றனர். இன்னும் 10 வருடங்களில் எமது மக்களின் வாழ்க்கை மட்டம் மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## குட்டிச் சுட்டியின் விளையாட்டு விழா

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளி விளையாட்டு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மேற்படி நிலைய முன்றிலில் ம.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கேவிமலநாதன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி ஞானலோஜினி சிவஞானம், யா/கோண்டாவில் இராம கிருஷ்ணா மகாவித்தியாலய அதிபர் வாமதேவன், திருநெல்வேலி சம்பத் வங்கி முகாமையாளர் அ.முரளிதரன், நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்தகுமார், கோண்டாவில் பொதுச் சுகாதார பரிசோதகர் ந.பிறேம்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# தமிழ் சமுதாயத்திற்கு சேவை செய்ய மாணவ சமுதாயம் முன்வரவேண்டும்

## வடக்கு முதலமைச்சர் அழைப்பு

வெளிநாடுகளுக்குச் செல்வது உங்களைத் தனிப்பட்ட முறையில் வாழவைக்கும். ஆனால் உள்ளூரில் நின்று சேவை செய்வது எமது தமிழ்பேசும் சமுதாயத்தை முன்னேற்றும் என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரியின் புதிய நுழைவாயில் மாடத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல புகழ்பூத்த கல்விமான்கள் உங்கள் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் பணியாற்றினார்கள். மாணவ, மாணவியர்கள் படித்து பல்கலைக்கழகம் சென்று வாழ்க்கையில் வெற்றி பெற்று வாழ்ந்துள்ளனர்.

இவ்வாறு வெற்றி நடைபோட்ட கல்லூரி அரசியலில் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக பல பாதிப்புக்களை எதிர்நோக்கியது.

2005ஆம் ஆண்டில் அழிவுகளிலிருந்து செழிப்புற்று நவோதயப் பாடசாலையாகத் தரம்பெற்றது.

2011 ஆம் ஆண்டு தேசிய பாடசாலையாகத். தரம் உயர்த்தப்பட்ட பின்னர் அதாவது வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள ஒரேயொரு தேசிய பாடசாலையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் உங்கள் கல்லூரி மீண்டும் வெற்றி நடைபோட்டு வலம் வருவதை நான் அவதானிக்கின்றேன்.

மீண்டும் கூேற், சாரணியம், முதலுதவிப் படை முதலான இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முனைப்புடன் செயற்பட்டுவருவதையும் காண்கின்றேன்.

நல்ல நிலையில் இருந்து சொற்ப காலத்திற்கு கருமேகக் கூட்டங்களுள் மறைந்து செழிப்பின்றி நின்றிருந்த உங்கள் கல்லூரி அண்மைக்காலங்களில் கருமேகம் கலைந்து முழுமதி போன்று காட்சி தருவதையிட்டு மகிழ்வடைகின்றேன்.

மனித வாழ்க்கையில் மாணவப் பருவம் போல் ஒரு பருவம் வருவதில்லை. அது ஒரு சிறந்த கால கட்டம்.

எதனையும் அறியவேண்டும், கற்கவேண்டும் என்ற ஒரு அவா ஒருபுறம், எதனையும் மிகவும் ஆபத்தானதாகவோ வினையானதாகவோ எடுத்துக்கொள்ளாத ஒரு மிக இலகுவான மனோநிலை மறுபுறம்.

அந்தக் கால கட்டத்தில் இருக்கும் இந்த நெல்லியடி மகா வித்தியாலய மாணவ, மாணவியருக்கு நான் கூறக்கூடிய ஒரு அறிவுரை உண்டு. அதாவது உங்கள் சமூகம் ஒரு இக்கட்டான நிலையில் இருந்து வெளிவந்துள்ளது.

போரின் தாக்கத்தால் எமது மக்கள் பலர் கண்ணிழந்து, காலிழந்து, கருத்திழந்து, வீடிழந்து, வளமிழந்து வறுமைக் கோட்டின் பிடியினுள் சிக்கி நிற்கினர்.

அவர்களை விரைவில் வந்து தூக்கிவிட வேண்டிய கடப்பாடு உங்களுக்குண்டு.

நீங்கள் வைத்தியர்களாகவோ, விஞ்ஞானிகளாகவோ, பொறியியலாளர்களாகவோ, சட்டத்தரணிகளாகவோ, வேறு தொழில்கள் பார்ப்பவர்களாகவோ வந்தாலும் வெளிநாடுகளைத் தேடிச்செல்லாதீர்கள்.

உள்நாட்டில் இருந்து உங்கள் மக்களுக்குச் சேவை செய்ய முன்வாருங்கள். வெளிநாடுகளுக்குச் செல்வது உங்களைத் தனிப்பட்ட முறையில் வாழவைக்கும். ஆனால் உள்ளூரில் நின்று சேவை செய்வது எமது தமிழ்பேசும் சமுதாயத்தை முன்னேற்றும் முன்மாதிரியாகத் திகழச் செய்யும்.

எனவே, நன்றாகப் படியுங்கள், நன்றாக விளையாட்டில் ஈடுபடுங்கள், கலைகளில் திறனைக் காட்டுங்கள். ஆனால் உங்கள் சாதனைகளை தமிழ்ச் சமூகத்திற்கு அர்ப்பணிங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-60)

# குழு அறிக்கையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் நிலவும் குழு அறிக்கையாளர் சிங்கள பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை கல்வித் தகைமை, தொழில்சார் அனுபவம் பற்றிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2014.07.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரி 2014.07.15 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் மற்றும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகளாக கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உ/த) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 4 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் / கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/த) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியுடன் சிங்கள மொழியில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் அடங்கலாக ஆறு பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருத்தல் வேணடும் என்பதுடன் சிங்கள மொழியில் திறமைச்சித்தியுடன் எல்லாமாக ஐந்து திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தலும் வேணடும். அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் கணிதம் அடங்கலாக எட்டுப் பாடங்களுக்குக் குறையாமல் சித்தி அடைதிருத்தல் வேண்டும் என்பதுடன் சிங்கள மொழியில் திறமைச் சித்தியுடன் எல்லாமாக ஐந்து திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தலும் வேண்டும்.

தொழில்சார் தகைமைகளாக சுருக்கெழுத்து வேகம்-நிமிடம் ஒன்றுக்கு 100 சொற்கள் (90% செவ்வையுடன்) தட்டெழுத்து வேகம்-நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள் (95% செவ்வையுடன்) சிங்கள மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல். ஆங்கிலம், தமிழ் மொழி அறிவும் கணனி அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இராசி பலன்

26-6-2014
(ஆனி 12, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 12.43 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.40 மணிவரை
இராகுகாலம் -1.25-2.55 மணிவரை
சுபநேரம் - 7.25-8.55 மணிவரை
அமாவாசை விரதம்

வளவன்

**மேடம்:** மனதில் தேவையற்ற சங்கடங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், அதிகாரிகளின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**இடபம்:** வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு, மனதில் புதிய சிந்தனைகள் உருவாகும், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்:** சோம்பலை விலக்குவது நல்லது, உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படாலம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்கள் உருவாகும்.

**கடகம்:** சயன சுகமுண்டு, பெரியோரால் மதிக்கப்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** இஷ்ட சித்தியுண்டு, தனதானியச் சேர்க்கையுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**கன்னி:** தொழிலில் கடும் பிரயாசை காட்டுவீர்கள், எதிர்பாராத செலவுகள் இடம்பெறலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** காலையில் சலசலப்பும் மாலையில் கலகலப்பும் இருக்கும், போசன சுகமுண்டு, விரயங்கள் கூடும், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மனோ தைரியமுண்டு, மாலை நேரங்களில் சில மனஸ் தாபங்கள் ஏற்பட வாய்ப்புண்டு, கடன் தொல்லைகள் அதிகரிக்கும், பிரயாணங்களில் மனச் சோர்வு ஏற்படலாம்.

**தனுசு:** ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கும் எண்ணம் உருவாகும், பகைவர்கள் மனம் மாறுவர், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கௌரவமான நாள்.

**மகரம்:** அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பணக்குறைவுண்டு, முயற்சியில் சில தாமதங்கள் ஏற்படலாம், தாழ்ந்த சுபாவமுண்டு, குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்:** ரோக பயமுண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்:** மனோ தைரியம் கூடும், நற்கீர்த்தியுண்டு, இஷ்ட சித்தியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழ்வீர்கள், பயணங்களால் பயனுண்டு, உற்சாகமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடும் நினைவுரைகளும்


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகவும் வலிகாமம் வடக்கு-தெல்லிப்பழை பிரதேச செயலராகவும் இருந்த அமரர் பத்தினியம்மா திலகநாயகம் போல் நினைவு நிதியமும், வலிகாமம் வடக்கு பண்பாட்டு பேரவையும் இணைந்து நடத்தும் யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் பெண் கலைஞர்கள் நூல் வெளியீடும், அமரர் பத்தினியம்மா திலகநாயகம் போலின் நினைவுரைகளும் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பத்தினியம்மா நிதிய தலைவர் ப.இராஜகோபாலன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை உடுவில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ரதி நகுலேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

அறிமுக உரையை யாழ். பல்கலைக் கழக வருகைதரு விரிவுரையாளர் தி.செல்வமனோகரன், வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம எந்திரி ஆர்.சுரேஸ்குமார், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளர் பண்டிதர் ந.கடம்பேஸ்வரனும் மற்றும் பதிலுரையை கிளிநொச்சி மாவட்ட செயலக பண்பாட்டு அலுவலரும் நூல் ஆசிரியருமான மார்க்கண்டு அருள்சந்திரன் ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர்.

அமரர் பத்தினியம்மா திலக நாயகம் போல் குறித்த நினைவுரைகள் பல்வேறு தலைப்புக்களில் ஆற்றப்படவுள்ளன. (அ-254)




# 40 வருடங்களாக திருத்தப்படாத வீதி

## கவனத்தில் எடுப்பார்களா?

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு ஆவரங்கால் சர்வோதய சந்தியில் இருந்து இளமாலைக்குச் செல்லும் பிரதான வீதி கடந்த 40 வருட காலமாக திருத்தப்படாது மணல் வீதியாகவே காணப்படுகின்றது என அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் குறித்த இளமாலைப் பகுதியில் பொதுமக்களால் வீட்டுக் கழிவுப் பொருட்கள் வீதிகளில் கொட்டப்படுவதாகவும் தெரிவிக்க ப்பட்டுள்ளது.

இதனால் சுவாசிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழில் பல பகுதி வீதிகளும் காப்பெற் வீதிகளாக மாறி வருகின்றது.

ஆனால் குறித்த வீதி தார் கூட இன்றி கவனிப்பாரின்றி காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வீதியூடாக தினமும் விவசாயிகள் மற்றும் ஆவரங்கால் பாடசாலை மாணவர்கள்,வேலைக்குச் செல்வோர் என பலர் இவ்வீதியூடாக சிரமத்தின் மத்தியில் பயணித்து வருகின்றனர்.

மழை காலங்களில் இவ்வீதிகளில் சேறு படிந்து மேலும் மோசமாகிவிடும்.

எனவே மழை காலத்திற்கு முன்னர் குறித்த வீதியை புனரமைத்து தருமாறும் அவ்வீதியால் மக்களால் கொட்டப்படுகின்ற கழிவுப்பொருட்களை தடைசெய்ய மாற்று நடவடிக்கையாக கழிவுப்பொருட்கள் கொட்டுவதற்கு பிளாஸ்ரிக் கொள்கலனை வைக்குமாறும் உரிய அதிகாரிகளிடம் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-134)

# வரலாற்றுச் சுவடுகள் புகைப்படக் கண்காட்சி

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மற்றும் ஊடக வளங்கள் பயிற்சி மையம் என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள, வரலாற்றுச் சுவடுகள் என்னும் புகைப்படக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகிய நிலையில் நாளை வெள்ளிக்கிழமை வரை, பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தலைமையில் கலைபபீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இப்புகைப்படக் கண்காட்சியில் 60 வரலாற்று தொல்லியல் இடங்களின் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதோடு பேராசிரியர் இந்திரபாலாவின் தொல்லியல் நிலையமும் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கண்காட்சியின் போது, தொல்லியல் இடங்களின் அழிவையும் அவற்றை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்படவுள்ளது. (அ-23)

# இளைஞர் தொல்லை அதிகரிப்பு; பொலிஸாரின் ரோந்து அவசியம்

## பொது மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

ஊரெழு கிழக்கு பகுதியில் இரவு வேளையில் இளைஞர்களின் கேலி, கிண்டல்கள் அதிகரித்துள்ளதாக அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் கேலி,கிண்டல்கள் மாலை 6 மணி முதல் இரவு 9 மணிவரை தொடர்வதாக மக்கள் சுட்டியுள்ளனர்.

வகுப்புக்களின் பின்னர் வீடு செல்லும் பெண் பிள்ளைகளையும் வேலை விட்டுச் செல்லும் பெண்களையும் அங்கு கூடும் இளைஞர்கள் கேலி செய்கின்றனர்.

இதனால் அவர்கள் தாம் மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற பொலிஸாரின் சிவில் குழு கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனை அடுத்து குறித்த பகுதியில் இரவு வேளையில் கோப்பாய் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவர் என தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடவில்லை.

இதனால் இவ் இளைஞர்கள் தொல்லை அதிகரித்து காணப்படுகின்றது.

எனவே இப் பகுதிகளில் இரவு வேளையில் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-134)

# பொது சுகாதார பரிசோதகர்கள் யாழ். நகரில் திடீர் சோதனை

## ஒரு கடைக்கு சீல்; 6 பேருக்கு அபராதம்

யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள மொத்த சில்லறை வியாபார கடைகளில் நேற்று முன்தினம் சுகாதார பரிசோதகர்கள் நடத்திய திடீர் சோதனையின் போது கடை ஒன்றிற்கு சீல்வைக்கப்பட்ட 6 கடை உரிமையாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அப்ராதமும் விதிக்கப்பட்டது.

மேற்படி கடைத் தொகுதியில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.உமாசுதன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து திடீர் சோதனை மேற்கொண்ட போது காலாவதியான பொருட்கள் வைத்திருந்த உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு யாழ்.நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் போது கடை உரிமையாளர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் கடை ஒன்றிற்கு சீல் வைக்கப்பட்டதுடன் 6 கடை உரிமையாளர்களுக்கு மேற்படி அபராதம் விதிக்கப்பட்டு காலாவதியான பொருட்கள் அழிக்கப்பட்டன. (அ)




# ஆவரங்காலில் கல்விக்கண்காட்சி

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய ஆரம்ப இடைநிலைப் பிரிவினரின் கல்விக் கணகாட்சி இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் பாடசாலை அதிபர் ச.சத்தியவரதன்தலைமையில்நடைபெறும்

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கே.வி.குகேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குணராஜா, கௌரவ விருந்தினர்களாக வலி.கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் இ.ஐங்கரன் மற்றும் பா.சுந்தரரூபன ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (அ)

# பண்ணிசைப் போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித்திணைக் களத்தின் அனுசரணையில் திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு ஞானசம்பந்தர் இல்ல அறக் கட்டளையும் சைவ மகாசபையும் இணைந்து நடத்திய பண்ணிசைப் போட்டி வன்னி மற்றும் யாழ்.பிராந்தியங்களில் நடைபெற்றது.

வன்னிப் பிராந்தியத்தில் முதல் மூன்று இடங்களை பெற்ற பாடசாலைகள் விபரம் வருமாறு,

வ/கந்தபுரம் வாணிவித்தியாலயம், கிளி/உருத்திரபுரம் ம.வி, கிளி/முழங்காவில் ம.வி.

யாழ்.பிராந்தியத்தில் யாழ்/இந்து கல்லூரி,யா/இராமநாதன் கல்லூரி, யா/கொட்டடி நமசிவாய வித்தியா லயம்.

இப்போட்டியின் இறுதிப் தெரிவில் வன்னிப்பிராந்தியத்திலிருந்து மன்/இலுப்பைக்கடவை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மு/புதுக் குடியிருப்பு மத்திய கல்லூரி, வ/ஐங்கரன் அறநெறிப் பாடசாலை ,மு/தண்டுவான் அ.த. பாடசாலை, வ/மகாலட்சுமி அறநெறி பாட சாலை, மு/மல்லாவி மத்திய கல்லூரி, கிளி/முருகானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் கலந்து கொண்டன.

யாழ்.பிராந்தியத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யா/பண்டத்தரிப்பு உயர்தரப் பாடசாலை, யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம், யா/ஸ்கந்த வரோதயாக் கல்லூரி, யா/புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி,யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி,யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் பங்கு கொண்டன. (அ)



யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் உட்பட தூதுக்குழு அதிகாரிகள் நேற்றைய தினம் வடக்கு மாகாணசபைக்கு சென்று பார்வையிட்டதுடன் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதை படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளின்)

# அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

(கரணவாய்)

நெல்லியடி நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் வியாகேசு தலைமையில் இடம் பெறவுள்ளது.

ஆர்வலர்களை கலந்து கொண்டு ஆலோசனை வழங்கியுதவுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத தலைவர்களுடன் கலந்துரையாடியே பிரச்சினைகளை தீர்க்க வேண்டும்

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள் ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன் தினம் நடை பெற்ற இந்த. சந்திப்பின்போது அண்மையில் அளுத்கம, தர்காநகர், வெலிப்பன்ன மற்றும் பேருவளை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து கலந்துரையாடப்ப ட்டுள்ளது.


இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம் பெறாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறி த்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டு ள்ளது.

சந்திப்பில் கருத்து வெளியிட்ட பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அனைத்து மத தலைவர்களையும் சந்தித்து அவ ர்களுடன் கலந்துரையாடியே இதுபோன்ற பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டி யுள்ளது என்று குறிப்பிட்டதாக நீதியமை ச்சின் ஊடக இணைப்பதிகாரி தெரிவித் தார்.

ஒரு சம்பவம் இடம்பெற்றதுடன் இது போன்ற கலந்துரையாடல்களை நடத்து வதைவிட நீண்டகால அடிப்படையில் திட்ட ங்களை முன்னெடுத்து செயற்படுவது அவ சியமாகும் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்திப்பில் வலியுறுத்திய தாகவும் நீதியமைச்சின் ஊடக இணைப்பதிகாரி குறிப்பிட்டார்.

இதேவேளை அசம் பாவிதங்கள் இடம் பெற்ற பிரதேசங்களின் பாதுகாப்பு உறுதிபடு த்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சந்திப்பின் போது உறுதியளித்ததாகவும் இணைப்பதிகாரி குறிப்பிட்டார்.

(அ)



**அன்பு வாசகர்களே!**

நயினை நாகபூஷணி அம்மன் பாமாலைக்கு
உங்கள் ஆக்கங்களை
பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 31 சூரி செவ் 9 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில் MA / அரச தொழில்
தொ.இ: B/1519

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணிகி.பா: 29.25
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L (UK - PR)
தொ.இ: B/1520

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 65.75 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc /நிரந்தர வேலை (ஓமான்)
தொ.இ: B/1523

பிறப்பு: 1968 இந்து
நட்சத்திரம்: சதயம் 4
கி.பா: 15.25 சூரி செவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BSc / IT Consultant
தொ.இ: B/1524

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி 1
கி.பா: 33 சூரி செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: LLB / சட்டத்தரணி (UK – Student Visa)
தொ.இ: G/2163

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 24 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில் : Software Engineering / Asst. Accountant
தொ.இ: G/2164


பிறப்பு: 1973 கிறிஸ்தவம் RCந ட்சத்திரம்: அத்தம் 2
கி.பா: 28.25 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில் : BA /அரச உத்தியோகம்எதிர்பார்ப்பு: RC க்கு மாறுபவர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ: G/2169

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 37 செவ் 8 இல்
உயரம்: 4'10"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/2170

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய

## 2014 ஆம் ஆண்டு (ஜய வருடம்) உயர் திருவிழா



| | | | | |
|---|---|---|---|---|
| 28.06.2014 | சனிக்கிழமை | 01 ஆம் திருவிழா | பகல் | கொடியேற்றம் 12.00 மணி |
| 02.07.2014 | புதன்கிழமை | 05 ஆம் திருவிழா | இரவு | முத்துச்சப்பறம் |
| 04.07.2014 | வெள்ளிக்கிழமை | 07 ஆம் திருவிழா | இரவு | கைலைக்காட்சி |
| 06.07.2014 | ஞாயிற்றுக்கிழமை | 09 ஆம் திருவிழா | பகல் | எழுந்தருளி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் |
| 07.07.2014 | திங்கட்கிழமை | 10 ஆம் திருவிழா | பகல் | சிவபூசைக் கைலைக்காட்சி |
| | | 10ஆம் திருவிழா | இரவு | திருமஞ்சம் |
| 08.07.2014 | செவ்வாய்க்கிழமை | 11 ஆம் திருவிழா | பகல் | விஷேட கருட சர்ப்ப பூசை வாயு பட்சணி நாகம் வீதியுலா |
| | | | இரவு | பூந்தண்டிகை |
| 09.07.2014 | புதன்கிழமை | 12ஆம் திருவிழா | | குதிரை வாகனம் |
| 10.07.2014 | வியாழக்கிழமை | 13 ஆம் திருவிழா | பகல் | கைலைக்காட்சி |
| | | | இரவு | சப்பறம் |
| 11.07.2014 | வெள்ளிக்கிழமை | 14 ஆம் திருவிழா | பகல் | தேர் காலை |
| 12.07.2014 | சனிக்கிழமை | 15 ஆம் திருவிழா | காலை | தீர்த்தம் |
| | | 15 ஆம் திருவிழா | மாலை | திருவூஞ்சல் , கொடியிறக்கம் |
| 13.07.2014 | ஞாயிற்றுக்கிழமை | 16 ஆம் திருவிழா | இரவு | (பூங்காவனம் தெப்போற்சவம்) |

யாத்திரிகர்களின் நலன்கருதி, வழமைபோல் இம்முறையும் அமுதசுரபி அன்னதான சபையினர், தாகசாந்தி நிலை யத்தினர், போக்குவரத்து சேவையினர், மோட்டார் படகுச் சேவையினர், சுகாதார சேவைப் பகுதியினர், தொண்டர் சபையினர், சாரணர்கள். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவினர், செஞ்சிலுவைச் சங்கத்தினர், மக் கள் நலன்புரிச் சங்கத்தினர் அனைவரும் வேண்டிய ஒழுங்குகளைச் செய்துள்ளனர் என்பதை அறியத் தருகின் றோம். இப்பெருவிழாச் சிறப்புடன் செய்து முடிப்பதற்கு திருவிழா உபயகாரர்களும், அடியார்களும் எமக்கு பூரண ஒத்துழைப்புத் தந்துதவுமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு

அன்னையின் அருள் பெற அடியார்கள் அனைவரும் வருக.

(ச-7747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் கோமஸ் விட்கெட் தலைமையிலான தூதுக் குழுவினர் நேற்றைய தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தனர். இதன்போது வடமாகாணத்தால் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

(படம்:-என்.குமார்)

# முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு

(தும்பளை)

பருத்தித்துறை கற்கோவளம் ஆதவன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேற்படி முன்பள்ளி வளாகத்தில் கற்கோவளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ்.ஆனந்தராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக முன்பள்ளி கோட்ட இணைப்பாளர் எஸ்.சுதாஜினி, முன்பள்ளி உத்தியோகத்தர் வி.தர்ஷினி, குடும்ப நல உத்தியோகத்தர் எஸ்.சசிகலா, சமுர்த்தி உத்தியோகத்தர் ஜெ.பவரூபன், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.சுபாசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (அ-19)

# யுத்த இழப்பு மதிப்பீட்டு அறிக்கை 3 வாரங்களில் அரசின் கையில்

## புள்ளிவிபரவியல் திணைக்களப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்த இழப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தொகை மதிப்பீட்டு அறிக்கை 3 வாரங்களில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்கள பணிப்பாளர் டீ.சி. ஏ. குணவர்தன தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமையவே இந்த தொகை மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டதாக குறிப்பிட்ட அவர் சில வரையறைக்குட்பட்டே வடக்கு, கிழக்கு பகுதிகளில் இது தொடர்பான தொகை மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் யுத்தம் தொடர்பான தொகை மதிப்பீடு குறித்து வினவப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர் யுத்தத்தினால் இறந்தவர்கள், காணாமற் போனவர்கள், அங்கவீனமுற்றோர் குறித்தும் ஏற்பட்ட சொத்து இழப்புக்கள் குறித்தும் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களம் கணிப்பீடு மேற்கொண்டது.

கடந்த வருடம் இடம்பெற்ற இந்த தொகை மதிப்பு நடவடிக்கை மிகவும் பாரதூரமானது.

இது தொடர்பில் எமக்குக் கிடைத்த தகவல்களை ஆய்வு நடத்தி வருகிறோம்.

கொழும்பு போன்ற பகுதிகள் போலன்றி வடக்கு, கிழக்கு மக்கள் ஆர்வமாக தகவல்களை வழங்கினர்.

மாவட்ட செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவியுடன் தொகை மதிப்பீடு முன்னெடுக்கப்பட்டது. யாரும் தகவல் வழங்காமல் மறுக்கவில்லை.

1982 ஆம் ஆண்டு முதல் இன்று வரை யுத்தத்தினால் இறந்த, காணாமற் போன நபர்கள் குறித்து தகவல் திரடடப்பட்டது. மறைபபதற்கு இதில் எதுவுமில்லை என்றார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 400 | 400 |
| தக்காளி | 220 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 120 | 160 |
| கரட் | 150 | 200 |
| பூசணி | 80 | 80 |
| புடோல் | 60 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 |
| பாகற்காய் | 140 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 |
| பீற்றூட் | 120 | 120 |
| கறிமிளகாய் | 220 | 200 |
| முருங்கைக்காய் | 200 | 200 |
| போஞ்சி | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 |
| கீரை – 1 பிடி | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 56

சுதா சர்மிலன்




சுவேனி யோகா





நிலா நிலானி




பின்துசா பின்து




லாவண்யா ரகுநாதன்




அஜந் குலசிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண இலங்கையுடன் மோடி பேச வேண்டும்

## கருணாநிதி அறிக்கை

இலங்கை சிறைகளில் இருக்கும் 64 தமிழக மீனவர்களை விடுவித்து, இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வதும் விரட்டி அடிப்பதும் இலங்கைக்கு கொண்டு சென்று சிறையில் அடைப்பதும் விளக்கமறியலை நீடிப்பதும் மீனவர்களின் படகுகளையும் வலைகளையும் நாசமாக்குவதும் நீண்டு கொண்டே போகிறது.

மத்தியில் ஆட்சி மாறியபோது, நமது பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ சந்தித்த பின்னர் இந்த பிரச்சினைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக இச்சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாபட்டினத்தைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட விசைப்படகு மீனவர்கள் கடந்த 23 ஆம் திகதி கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர்.

அவர்களில் பத்து படகுகளைச் சேர்ந்த மீனவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கு பகுதியிலே மீன் பிடித்துக் கொண்டிருந்த நேரத்தில் இலங்கை கடற்படைக்கு சொந்தமான மூன்று படகுகளில் இலங்கை கடற்படை வீரர்கள் தமிழக மீனவர்களின் படகுகளைச் சுற்றி வளைத்திருக்கின்றனர்.

7 விசைப்படகு மீனவர்கள் தப்பித்த போதிலும், 3 படகுகளில் இருந்த 11 மீனவர்களை அவர்கள் கைது செய்துள்ளனர். இதனால் ஜெகதாபட்டினப் பகுதியில் மீனவர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

இவர்கள் தவிர கடந்த 18ஆம் திகதி நாகை மீனவர்கள் 7 பேர் சிறைபிடிக்கப்பட்டு இலங்கையில் வைக்கப்பட்டுள்ளார்கள். அதற்கு முன்பே தமிழக மீனவர்கள் 46 பேர் இன்னமும் இலங்கை சிறையில் உள்ளனர்.

இலங்கை சிறைகளில் வாடும் இந்த 64 மீனவர்களும் உடனடியாக விடுவிக்கப்பட மத்திய அரசு, குறிப்பாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, இந்த கொடுமை தொடர்ந்து நீடிக்கப்படாமல் தடுக்கப்பட நிரந்தரமான ஒரு தீர்வு காணவும் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை அரசுடன் பேசி முடிவு காண வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)



# இரசாயனம் அடங்கிய மரக்கறி விற்பனை; தடுப்பதற்கு விவசாய திணைக்களம் முடிபு

இரசாயன பதார்த்தங்கள் அடங்கிய மரக்கறி, பழவகைகள் என்பவற்றை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க விவசாய திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தற்போது சந்தைகளில் இரசாயன பதார்த்தங்கள் அடங்கிய மரக்கறி மற்றும் பழவகைகள் பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் மக்கள் மத்தியில் புற்றுநோய், சிறுநீரக நோய் உட்பட பல்வேறு உடலஉபாதைகளும்ஏற்படுகின்றன.

இதனை தடுக்கும் நோக்கில் விவசாயிகளுக்கு இயற்கை சேதனப்பசளைகளை பயன்படுத்தும் மற்றும் ஊக்குவிக்கும் முறைகளை விவசாயத்திணைக்களம் பிரதேச திணைக்களங்களூடாக அமுல்படுத்தி வருகின்றன.

இதேவேளை, பிராந்திய சுகாதார பணிமனைகள் மற்றும் விவசாயத்திணைக்கள அதிகாரிகள் விற்பனை செய்யப்படும் மரக்கறி, பழவகைகளில் இரசாயனப்பதார்த்தம உள்ளதா என பரீசித்துப் பார்த்து வருகின்றனர். அத்துடன் 33 வகையான இரசாயன மருந்து வகைகளும் தடை செய்யப்பட்டுள்ளன.

மேலும் விஷமற்ற போசாக்கு நிறைந்த பழவகைகளையும் தேசிய பாரம்பரிய பழச்செய்கையினையும் விஸ்தரிப்பதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் மூலம் எதிர்காலத்தில் நோயற்ற பரம்பரையை உருவாக்குவதே திட்டமாகும். இதற்கிணங்க மா, பலா, தோடை, மாதுளை, ஜம்பு, பனிஜம்பு, வெரலு போன்றவற்றை உற்பத்தி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, கிழக்கில் இரசாயனப்பதார்த்தமற்ற பழவகைகள் மற்றும் மரக்கறி வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளை இனம் கண்டு அவர்களை கௌரவித்து பணப்பரிசுகள் வழங்கும் திட்டங்களில் உள்ளூர் நிறுவனங்கள், சமூகநல அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளன. (அ)

# தேசிய ஒற்றுமையை உருவாக்கும் முனைப்பில் இறங்கினார் ரணில்

நாட்டில் தேசிய ஒற்றுமை முனைப்புக்களில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மதத் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதானிகள் உள்ளிட்ட பலரையும் அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

கொழும்பில் இன்றையதினம் இந்தப் பேச்சுவார்த்தை நாடாளுமன்ற வளாகத்தில் நடத்தப்படவுள்ளது. கடந்த வாரத்தில் பேருவளை மற்றும் அளுத்கம பிரதேசத்தில் வன்முறைகள் வெடித்தன.

இந்தப் பிரதேசங்களை பிரதிநிதித்துவம் செய்யும் மதத் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் ரணிலுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இனங்களுக்கு இடையில் சகோதரத்துவத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்படவுள்ளது. (அ)

# வட்டரக்க தேரர் தன்னைத்தானே தாக்கியதாக ஒப்புக் கொண்டாராம்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஜாதிக பலசேனாவின் ஏற்பாட்டாளர் வட்டரக்க விஜித தேரர், உளவியல் மருத்துவர் ஒருவரிடம் காண்பிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவரை எவரும் தாக்கவில்லை என சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

காயங்களுக்கு உள்ளாகி சத்திர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் அவருக்கு ஏதேனும் உளவியல் பாதிப்புக்கள் உண்டா என்பதனை கண்டறிவதற்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை வட்டரக்க விஜித தேரர் தன்னைத் தானே தாக்கிக் கொண்டதாக ஒப்புக் கொண்டார் என சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தனக்கு வழங்கப்பட்ட இரு பொலிஸ் மெய்ப் பாதுகாவலர்கள் அண்மையில் திடீரென விலக்கப்பட்ட நிலையில் அவர்களை மீளத் திரும்பப் பெறும் உள்நோக்கத்துடனேயே வண. வட்டரக்க விஜித தேரர் தமக்குத்தானே உடல் தீங்கு செய்துகொண்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையிலிருந்து விடுவிக்கப்பட்டாலும், தம்மை யாரோ கடத்திச் சென்று, தாக்கி, உடற்தீங்கு விளைவித்தனர் என்ற அவரது முறைப்பாடு வெறும் நாடகம் என்று கண்டுபிடிக்கப்படுமானால் அதற்காக கடும் சட்ட நடவடிக்கைகளை அவர் எதிர்கொள்ள வேண்டி நேரும் என்றும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (அ)

# ஜெயா மஹிந்தவை சந்திக்க வேண்டும்

## சுப்பிரமணியசாமி கோரிக்கை

(கொழும்பு)

தமிழக மீனவர் பிரச்சினைக்கு, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை நேரில் சந்தித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா தீர்வு காண வேண்டும் என பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரான சுப்பிரமணியசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

தமிழக மீனவர்கள் அத்துமீறி இலங்கை கடற்பகுதிக்குள் சென்று மீன்வளங்களை சுரண்டுவதாக, இலங்கை மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக, தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கையிலுள்ள யாழ்ப்பாணப் பகுதிக்கு நேரில் சென்று அங்குள்ள மீனவர்களை சந்தித்துப் பேச வேண்டும்.

மேலும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது தொடர்பாக, இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவையும், தமிழக முதல்வர் ஜெயலலிதா நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக் கூறியுள்ளார். (அ)

# பிரிவுத்துயர் பகிர்வு

## திருமதி கந்தசாமி நகுலேஸ்வரி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் உடுவில், சுன்னாகம் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி நகுலேஸ்வரி கடந்த 23 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

## திருமதி அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவாந்துறை பரலோக அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

## சபாரெட்ணம் விஸ்வநாதன்



தொண்டைமானாறு காட்டுப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரெட்ணம் விஸ்வநாதன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு Glendale Funeral Home, 1810, Albion Road, Etobicoke, ON M9W 5T1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

## திருமதி செல்வராஜா சிவபாக்கியம்



கரவெட்டி வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராஜா சிவபாக்கியம் கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## வடிவேலழகன் மதன்



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் இந்தியா, பிரித்தானியா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலழகன் மதன் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு Lambeth Crematorium and Cemetery, Blackshaw Road, Tooting, London, SW17 OBY என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




களத்துமேட்டில் யாருமற்ற பகுதியில் சிதறிக்கிடந்த தானியத்தைத் தயங்கித்தயங்கி ஒரு சிட்டுக்குருவி கொத்தித் தின்றுகொண்டு இருந்தபோது வேறு ஒரு திசையில் இருந்து சர்ரென்று பறந்து வந்து இறங்கி உட்கார்ந்தது ஒரு புறா.

எப்போது பார்த்தாலும் எதையாவது தின்றுகொண்டே இருக்கிறாயே உனக்கு வெட்கமே இல்லையா? சிறகுகளை ஒருமுறை விரித்துப் படபட என்று அடித்தபடி குருவியிடம் கேட்டது புறா.

என் பசிக்கு நான் சாப்பிடுகிறேன், இதில் என்ன வெட்கம்?. டது குருவி. ஆனால் அதைக் காட்டிக்கொள்ளாமல் அப்புறம் வீடு, கூரை, கட்டம், ஏரிக்கரை, வாய்க்கால் எல்லாம் பறந்து செல்வேன் என்று அழுத்தமாகச் சொன்னது.

புறாவின் பக்கமே திரும்பாமல் தன் போக்கில் தரையில் சிதறிக் கிடந்த தானிய மணிகளைக் கொத்திக் கொத்தி விழுங்கியது.

சிறிது நேரம் எந்தச் சத்தமும் கேட்க வில்லை. புறா பறந்து போய் இருக்கும் என்று நிம்மதியாக மூச்சு வாங்கியபடி தலையைத் திருப்பியது குருவி. ஆனால், புறா அங்கேயே உட்கார் எல்லாம் முடியும் என்று அழு த் தம் திருத்தமாகச் சொன்னது.

அப்படி என்றால் கிளம்பு. என்னோடு சேர்ந்து நீயும் பறந்து வா- புறா தன்னைப் பார் த்து புன்னகை செய்த விதம் குருவிக்கு கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. நெஞ்சை அழுத்துவது போல இருந்தது. தனக்கு திறமை உண்டு என்பதைப் புறா உணரும்படி செய்ய வேண்டும் என நினைத்தது.

சரி கிளம்பு என்றபடி சிறகு களை விரித்துப் பறந்தது. வா, வா என்றபடி சிரித்துக்கொண்டே சிறகை அசைத்த புறா ஒரே

# உயர... உயர... பறக்கலாமா?

வெற்றிலைக்காம்பு போன்ற சின்ன அலகால் தானியத்தைக் கொத்தி விழுங்கிவிட்டு வேகமாகத் தலையை அசைத்தது குருவி.

பசியைத் தவிர வேறு எந்த எண்ணமோ ஆசையோ கிடையாதா உனக்கு? கிண்டல் செய்யும் தொனியில் குர்குர் என்று குணுகிக் குலுங்கியது புறா.


இல்லை என்று நீயாகவே ஏன் நினைத்துக்கொள்கிறாய்? எனக்கும் ஆசை இருக்கிறது. கீச்கீச் என்று கோபமாகச் சொன்னது சிட்டுக் குருவி. அதன் உடல் நடங்குவது போல இருந்தது.

இத்தனை நாள் நீ சொன்னதே கிடையாதே, சொல் குருவி என்ன ஆசை? கெஞ்சுவதுபோலக் கேட்டது புறா.

எல்லாக் காலத்துக்கும் ஏற்ற பாது காப்பான ஒரு கூடு. அதுதான்என் ஆசை. புறாவை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டே சொன்னது குருவி. ஒரு தானியத்தை வேகமா கக் கொத்தி விழுங்கியது.

உயிர் பிழைத்து இருக்க இந்த ஆசை ரொம்ப அவசியம்தான் குருவி. ஆனால், நான் அதைக் கேட்கவில்லை. அதைத் தவிர வேறு என்னென்ன ஆசைகள் உண்டு?

பறப்பதற்கும் ஆசை உண்டு தெரியுமா? தலையை உயர்த்திச் சொன்னது சிட்டுக்குருவி.



எவ்வளவு உயரத்துக்கு உன்னால் பறக்க முடியும்? என்று கேட்டது புறா.

இந்த மரம் உயரத்துக்குப் பறப்பேன் என்று அருகில் தெரிந்த ஒரு பெரிய அரசமரத்தைக் காட்டிச் சொன்னது குருவி.

குருவி அலகை உயர்த்திக் காட்டிய மரத்தை அண்ணாந்து பார்த்தது புறா. இது எல்லாம் ஒரு உயரமா? என்று எண்ணிக் கொண்டது.

அப்புறம்?

ஒரு மரத்தில் இருந்து இன்னொரு மரத்துக்குப் பறப்பேன்.

அப்புறம்?

மீண்டும் ஒரே மாதிரி கேள்வி கேட்கப்பட்டதில் சலிப்புக் கொண்ந்து இருந்தது.

மரத்துக்கு மேலே வானத்தை நோக்கிப் பறப்பாயா? அந்த மேகத்தை நோக்கிப் பறப்பாயா? குறைந்தபட்சம் அந்தக் குன்றை நோக்கியாவது பறப்பாயா?அடுக்கடுக்காக கேள்விகளை முன்வைத்தது புறா.

குருவி வானத்தையும் மேகத்தையும் குன்றையும் அண்ணாந்து பார்த்தது. கண்கள் கூசின. அவற்றன் உச்சியையே அதனால் பார்க்க இயலவில்லை.

ஒரே வெள்ளைத்திட்டாகத் தெரிந்தது.ஒரு கணம் தன் இயலாமையை நினைத்து மனம் பொங்கியது. அதே தருணத்தில் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் விவேகமும் அதற்கில்லை.

நொடியில் மர உச்சியைத் தொட்டு வட்டம் இட்டது. ஒவ்வொரு கட்டத்திலும் முன்னால் பறந்துபோய் தவிப்போடு பறந்துவரும் குருவியை வேடிக்கை பார்ப்பதில் புறாவுக்கு உண்டான ஆனந்தத்துக்கு அளவேயில்லை.

மர உச்சியைக் கடந்து குன்றை நோக்கிப் பறந்தது குருவி. வழக்கமான உயரத்தை விட பல மடங்கு அதிக உயரத்தில் பறப்பதை நினைத்து தனக்குத்தானே ஆச்சரியத்தில் மூழ்கியது. ஆனால், வழக்கமாகப் பறக்கும் போது த்ன் மனம் உணர்கிற பரவசத்தை அக்கணத்தில் குருவியால் உணர முடியவில்லை. குன்றின் பிரமாண்டமான தோற்றம் ஒருபக்கம் அச்சத்தைப் பெருக்கியபடி இருந்தது.

அடிவயிறு வலித்தது. தொண்டை உலர்ந்துபோனது. ம்.... அப்படித்தான் வா, வா என்று மீண்டும் மீண்டும் தூண்டி முன்னால் பறந்தது புறா.

விலாப்புறத்தில் தொடங்கிய வலி, மெள்ள மெள்ள உடல் முழுதும் பரவி நெஞ்சை அழுத்துவதை உணர்ந்த குருவி, ஒரு புள்ளியில் தடுமாறி நின்றது. புறாவையும் வானத்தையும் மெதுவாக நிமிர்ந்து பார்த்தது. ஒரு துளியும் மகிழ்ச்சியே இல்லாமல் பறப்பது எவ்வளவு பெரிய வேதனை என்று நினைத்தது.

கூட்டுக்கும் களத்துமேட்டுக்கும் இடைப்பட்ட சிறிய தூரத்தைப் பறந்து கடப்பதில் இருக்கும் ஆனந்தமும் துள்ளலும் மாபெரும் உயரத்தை நோக்கிப் பறக்கும் போது பல மடங்காகப் பெருகும் என்று நினைத்த கனவு பொய்த்துப் போவதை அதனால் நம்பவே முடியவில்லை.

மகிழ்ச்சி இல்லாத செயலை வீம்புக்காக செய்வது வீண் வேலை என்று குருவிக்கு தோன்றியது. மரத்தின் உச்சியே தனக்கு வானம் போலும் என நினைத்தது.

அடுத்த கணமே களத்துமேட்டை நோக்கி இறங்கத் தொடங்கியது. அதைப்பார்த்த புறா குருவியை நோக்கிக் கூச்சலிட்டது.

நில் நில் ஏன் திரும்புகிறாய்? முடியவில்லையா? இவ்வளவு தான் உன் திறமையா? என்று ஏதேதோ கேள்விகள் கேட்டபடி புறாவும் தரையை நோக்கிப் பறந்து வந்தது.

தரையில் இறங்கிய குருவி நிழலில் ஒதுங்கி நின்றது. அதன் உடல் நடுங்கியபடி இருந்தது. கண்களை உருட்டி உருட்டி நான்கு பக்கங்களிலும் மெதுவாகப் பார்த்தது.

தன் கேள்விகளை இடைவிடாமல் கேட்டுக் கொண்டே குருவியின் அருகில் வந்து நின்றது புறா.

உன் வாழ்க்கையை நான் ஏன் வாழ வேண்டும் புறாவே. என் வாழ்க்கையே எனக்கு ஆனந்தம். என் போக்கில் என்னை விட்டுவிட்டுப் போ. என்னைத் திசை திருப்பிக் குழப்ப நினைக்காதே! தெம்பு இல்லாமல் போனாலும் உறுதியான குரலுடன் சொல்லிவிட்டு பக்கத்தில் இருந்த தானியத்தைக் கொத்தத் தொடங்கியது குருவி.

இங்கே பார், நான் சொல்வதைக் கேள். ஆசையைக் கட்டுப்படுத்த நினைக்காதே என்று தொடங்கி, புறா எதை எதையோ சொன்னபோதும் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

ஒரு கட்டத்தில் குருவியின் மௌனத்தால் எரிச்சல் கொண்ட புறா தின்னு, தின்னு முட்டாள் குருவி என்று முனகியபடியே வேறு பக்கம் பறந்து போனது.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

## 06.2014 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 363 - உரோமப் பேரரசன் ஜூலியன் கொல்லப்பட்டான்.
- 1483 - மூன்றாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1541 - இன்கா பேரரசை முடிவுக்குக் கொண்டுவந்த பிரான்சிஸ்கோ பிசாரோ கொல்லப்பட்டான்.
- 1690 - தென்மேற்கு இங்கிலாந்தின் நகரான டெயின்மவுத் நகரை பிரான்ஸ் முற்றுகையிட்டது.
- 1718 - தனது தந்தை மன்னர் முதலாவது பியோத்தரை கொல்லச் சதி செய்ததாக மரணதண்டனை விதிக்கப்பட்ட ரஷ்யாவின் இளவரசன் அலெக்சி பெட்ரோவிச் மர்மமான முறையில் இறந்தான்.
- 1723 - அசர்பைஜான் தலைநகர் பாக்கூ ரஷ்யாவிடம் வீழ்ந்தது.
- 1924 - அமெரிக்க ஆக்கிரமிப்புப்படை டொமினிக்கன் குடியரசை விட்டு விலகியது.
- 1948 - முதலாவது இருதுருவ திரிதடையத்துக்கான காப்புரிமத்தை வில்லியம் ஷோக்லி பெற்றார்.
- 1960 - சோமாலிலாந்து பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1975 - இந்திரா காந்தி இந்தியாவில் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்தார்.
- 1976 - உலகின் மிக உயரமான கட்டடமான கனடாவின் சி.என் கோபுரம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டது.

பிறப்புகள்

- 1824 - வில்லியம் தாம்சன், அயர்லாந்தைச் சேர்ந்த இயற்பியல் அறிஞர் (இ 1907)
- 1838 - பான்கீம் சட்டர்ஜி, வங்காள எழுத்தாளர் (இ. 1894)
- 1892 - பெர்ல் பக், அமெரிக்க எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1973)
- 1924 - இளையபெருமாள், தமிழ்நாடு தலித் அரசியல் தலைவர் (இ. 2005)
- 1906 - ம. பொ. சிவஞானம், தமிழக அரசியல்வாதி, தமிழறிஞர் (இ. 1995)

இறப்புகள்

- 1995 - ஏர்னெஸ்ட் வோல்ட்டன். நோபல் பரிசு பெற்றவர் (பி. 1903)

சிறப்பு நாள்

- சித்திரவதைக்குள்ளானோருக்கான சர்வதேச ஆதரவு தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**வந்துவிட்டது லாப ராகு!**
**வருமானம் இனி இருமடங்கு!**
**சுற்றத்தாரும் சுகமாக வாழ வேண்டும் என்று விரும்பும் விருச்சிக இராசி நேயர்களே!**

இறையருளை இயற்கையிலேயே கைவரப்பெற்றவர்கள் நீங்கள். எல்லோருக்கும் வாழ வழிகாட்டியாக விளங்கவேண்டும் என்று விரும்புவீர்கள். நேர்மறை சிந்தனைகளே வாழ்வை உயர வைக்கும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்கள்.

மூளை பலம்தான் மூலபலம் என்பதால் காலநேரம் கருதாமல் சிந்தித்துக் கொண்டேயிருப்பீர்கள். எதை, எப்படிச் செய்யலாம் என்று யோசித்து ஒவ்வொரு செயல்களிலும் ஈடுபடுவதால்தான் வெற்றிக் கனியை நீங்கள் எட்டிப்பிடிக்க முடிகிறது. அற்புத யோசனைகளை வழங்குவதால் ஆன்மிகப் பெரியவர்கள் முதல் அரசியல்வாதிகள் வரை தங்கள் வாழ்க்கைப் பாதையை சீராக்கிக்கொள்ள உங்களை நாடி வருகிறார்கள்.

லட்சம், லட்சமாக வந்தாலும் லட்சியத்தை விட்டுக்கொடுக்க மாட்டீர்கள். எதிரிகளையும் நண்பர்களாக மாற்றிக்கொள்ளும் ஆற்றல் உங்களுக்கு இருப்பதால், சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகமாகவே இருக்கும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைப்பெற்ற உங்களுக்கு இந்த ராகு-கேது பெயர்ச்சி எப்படிப்பட்ட யோகங்களையெல்லாம் வழங்கப்போகிறது என்பதைப் பற்றிப்பார்ப்போம்.

**வருமானத்தை இருமடங்காக்கும் லாப ஸ்தான ராகு!**
**வாரிசுகளின் வளர்ச்சியைக் கூட்டும் ஐந்தாமிடத்து கேது!**

இதுவரை துலாம் இராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், மேட இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் 21.06.2014 அன்று முதல் உங்கள் வாழ்க்கையில் பிரபல்ய யோகத்தை வழங்கப்போகிறார்கள். ராகு, லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போவதால் நீங்கள் வள்ளல்களாக மாறுகிற வாய்ப்பு உருவாகும். வருமானம் இருமடங்காகும். அல்லும் பகலும் உழைத்ததற்கு உரிய பலன்கள் அளவிற்கு அதிகமாகவே கிடைக்கும் நேரமிது.

பொதுவாக உச்ச குருவின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகிறது. எனவே, குரு பார்க்க கோடி நன்மை என்பதால் எடுக்கும் செயல்கள் எல்லாமே வெற்றியாகும். அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் ஆச்சரியப்படும் விதத்தில் நடைபெறும்.

கூட்டு முயற்சிகளிலிருந்து விலகி தனித்து செயற்படுவீர்கள். கொடுக்கல்- வாங்கல்களில் திருப்தி ஏற்படும். தங்கம், வெள்ளி தானாக வந்துசேரும். தலைமைப் பதவிக்கும் தகுந்தவர்கள் நீங்கள் என்று நிரூபித்துக் காட்டுவீர்கள். நட்புவட்டம் விரிவடையும்.

இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ராகுவையும், கேதுவையும் திருப்திப்படுத்தும் விதத்தில் சர்ப்ப சாந்தியைச் செய்துகொள்வதுதான். ராகு- கேதுக்கள் யோகம் தரும் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது அவற்றை முறையாக வழிபட்டு வந்தால் முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்லலாம். எனவே, உங்கள் சுயஜாதகத்தை புரட்டிப் பாருங்கள். அதில் ராகு- கேதுக்கள் இருக்கும் நிலை அறிந்து, அதன் பாதசார பலமறிந்து அதற்குரிய ஸ்தலங்களை தேர்ந்தெடுத்து யோகபலம்பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்கள் செய்தால் சந்தோஷ வாய்ப்புகளை நாளும் சந்திக்கலாம்.

கோச்சார ரீதியாக ராகு- கேதுக்களின் ஆதிக்கம் பார்த்து அதன் சாரபலத்தின் அடிப்படையில் நல்ல பலன்கள் உங்கள் உள்ளம் மகிழும் விதத்தில் வந்து சேரும். தற்சமயம் பெயர்ச்சியாகும் ராகு மூன்று நட்சத்திரக்காலில் சஞ்சரிக்கப்போகிறார். கேதுவும் மூன்று நட்சத்திரக்காலில் உலா வர இருப்பதால் அதற்கேற்ப வரும் பலன்கள் சேரும்.

இதுவரை 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, இப்பொழுது லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போவதால் உங்கள் வாழ்க்கையில் உயர்வு ஏற்படப்போகிறது. வரலாறு காணாத அளவு வளர்ச்சியை கூட்டப் போகிறார். தொழில் நடத்துவோர் கிளைத் தொழில் தொடங்கும் வாய்ப்பு உருவாகும். அடுக்கடுக்காக புதிய ஒப்பந்தங்கள் வந்து அலை மோதும்.

உத்தியோகத்திலிருப்பவர்கள் அதிகாரிகளின் அனுகூலத்தோடு அதிக வருமானங்களைப் பெறுவர். 2 ஆம் இடத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**வாரிசுகளின் வளர்ச்சியைக் கூட்டும் பஞ்சம ஸ்தான கேது!**

லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பஞ்சம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பார். 5 இல் சஞ்சரிக்கும் கேதுவை உச்சம் பெற்ற குரு பார்க்கிறார். எனவே, ஆன்மிகத்தின் மூலமாக அன்றாட வாழ்க்கையை நன்றாக அமைத்துக்கொள்ள இயலும். பிள்ளைகளின் கல்வித்தரம் உயரலாம். கலை, இலக்கியம், பத்திரிகை, ஜோதிடம், ஆன்மிகம் போன்ற துறைகளில் ஈடுபாடு கொண்டிருப்பவர்களுக்கு அதன்மூலம் புகழ் ஏணியின் உச்சிக்கு செல்வர். வெற்றிக்கனியை எட்டிப்பிடிக்க வித்திடும் நேரமாக இந்த நேரத்தைக் கருதலாம்.

திருஷ்டி ஏற்படும் அளவிற்கு உங்கள் தினசரி வாழ்க்கை அமையப் போகிறது. கோவில் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். ராகு- கேது வழிபாட்டை முறையாக செய்வதோடு, குலதெய்வ வழிபாடு, ஆனைமுகனையும், ஆறுமுகனையும், உமாதேவி உடனான சர்வேஸ்வரரையும், சனீஸ்வரரையும், நந்தியெம்பெருமானையும், அனுமனையும் [illegible] திருமகள் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். நன்மை அளிக்கும் நவக்கிரகங்களை வணங்கி காரியங்களை தொடங்கினால் உயர்வு வரும்.

**வாழ்க்கை வசந்தமாக வழிபாடு!**

லாப ஸ்தான ராகுவால் லாபம் குவியவும், 5 ஆம் இடத்து கேதுவால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கவும், செவ்வாய் தோறும் ஆனைமுகனையும், ஆறுமுகனையும் வழிபாடு செய்யுங்கள். யோகபலம் பெற்ற நாளில் செல்வவளம் தரும் தட்சணாமூர்த்தியை வழிபட்டு குடும்ப முன்னேற்றத்தைக் கூட்டிக்கொள்ளுங்கள்.

**பாதசாரப்படி ராகு- கேது தரும் பலன்கள்!**

**ராகு, செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 24.10.2014 வரை)**

செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். செல்வ நிலை உயரும். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இடம், பூமி வாங்கும் யோகம் உருவாகும். இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

**ராகு, சந்திரன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது: (25.10.2014 முதல் 01.07.2015 வரை)**

பயணங்களால் பலன் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொல்லை தந்தவர்கள் விலகுவர். கருத்து வேறுபாடுகள் அகலும். சகல பாக்கியங்களும் வந்து சேரும்.

**ராகு, சூரியன் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (02.07.2015 முதல் 07.01.2016 வரை)**

பழைய கூட்டாளிகளை விலக்கிவிட்டுப் புதிய கூட்டாளிகளை சேர்த்துக்கொள்ள முன்வருவீர்கள். குடும்பச்சுமை கூடும். அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அதிக பிரயாசை எடுப்பதன் மூலமே நிறைவேறும். அலைச்சல் அதிகரிக்கும். இதுபோன்ற காலங்களில் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச்செல்வது [illegible]

**கேது, புதன் காலில் [illegible] சஞ்சரிக்கும் பொழுது (21.06.2014 முதல் 25.02.2015 வரை)**

தொழில் வளம் சிறப்பாகி, லாபம் இருந்தாலும், விரயங்கள் கூடுதலாகவே இருக்கும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு நீங்கள் வெற்றி நடை போடுவீர்கள். வியாபாரத்தில் வருமானத்திற்கு புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள்..

**கேது, சனி சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (26.02.2015 முதல் 04.11.2015 வரை)**

வழக்குகளில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். வெளிவட்டாரப்பழக்க வழக்கம் விரிவடையும். விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கேது, குரு சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (05.11.2015 முதல் 07.01.2016 வரை)**

எண்ணற்ற நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும். தன்னிச்சையாகச் செயற்பட்டு தக்க விதத்தில் வெற்றியைக் காண்பீர்கள். வாய்ப்புகள் வாயிற்கதவைத் தட்டும். தெய்வத் திருப்பணிகளையும் ஏற்று நடத்த முன்வருவீர்கள்.

**சனி, குரு மாற்றங்கள் தரும் பலன்கள்**

16.12.2014 இல் விருச்சிக ராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசியிலேயே ஜென்மச் சனியாக சனிபகவான் சஞ்சரிப்பதால் இந்த நேரத்தில் ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை அமையும். வரவைக் காட்டிலும் செலவு கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் முழுக் கவனத்தையும் செலுத்துவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். வீடுமாற்றச் சிந்தனை மேலோங்கும். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் இனிய பலன்களை ஏராளமாகப்பெற இயலும்.

**குருப்பெயர்ச்சி!**

ராகு பெயர்ச்சிக்கு ஒரு வாரம் முன்னதாக குரு பெயர்ச்சியாகிவிட்டது. கடகத்தில் உச்சம் பெற்ற குரு உங்கள் இராசியினைப் பார்ப்பதால் அற்புதமான காலம். பொற்காலம் என்றுகூடச்சொல்லலாம். தொட்ட காரியங்களில் வெற்றிகிடைக்கும். தொழில் வளர்ச்சி மேலோங்கும். உற்றார், உறவினர்கள் உங்களுக்கு கைகொடுத்துதவுவர். வெற்றி என்ற மூன்றெழுத்து உங்கள் வீட்டில் நிலையாக இருக்கும். வருமானம் இருமடங்காகும். சுப காரியங்கள் நடைபெறும்.

05.07.2015 இல் சிம்ம இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். தன பஞ்சமாதிபதி 10 இல் சஞ்சரிக்கும்பொழுது தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்துதவுவர். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். குடும்ப ஒற்றுமை பலப்படும். எப்பொழுதோ வாங்கிப் போட்ட இடம் இப்பொழுது பலமடங்கு விலையுயர்ந்து பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

நாளை தனுசு...

**ஜோதிடக் கலைமணி**
**-சிவல்புரி சிங்காரம்-**

# ராகு-கேது பெயர்ச்சி பலன்கள்

**21.06.2014 - 07.01.2016**



## விருச்சிகம்



# வந்துவிட்டது லாப ராகு! இனி வருமானம் இருமடங்கு!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான வாழ்க்கை விருத்தி செயற்றிட்டங்கள் : நடைமுறைகளும் சில வழிகாட்டல்களும்



ஆ.நித்திலவர்ணன்
விரிவுரையாளர் கல்வியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நீண்டகால உள்நாட்டு யுத்தம், அரசியல் சீரின்மைகள் காரணமாக பாதிப்புக்குள்ளாகியிருக்கும் இலங்கையின் கல்வித்துறையை எல்லா மட்டங்களிலும் மேம்படுத்த வேண்டிய தேவை இன்றுள்ளது.

இதன் ஒரு அங்கமான க.பொ.த. உயர்தர மாணவர்கள் தமது வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்களை தமக்கும் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் மற்றும் நாட்டிற்கும் பயனுடைய வகையில் மேற்கொள்வதற்கு தேவையான வழிகாட்டல்களை வழங்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இக்கட்டுரையானது க.பொ.த. உயர்தர வகுப்புக்களுக்கான வாழ்க்கை விருத்திச்செயற்றிட்டம் தொடர்பாக ஆராய்கின்றது.

### சில நடைமுறை அனுபவங்கள

❒ இலங்கையில் க.பொ.த. உயர்தரம் வரை கற்கும் மாணவர்களில் மிகவும் குறைந்தளவானவர்கள் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப்பெற்றுக்கொள்கின்றனர். ஏனையவர்கள் வாழ்க்கைத்தகைமைக்கு தேவையான திறன்களை பூரணமாகப்பெற்றுக் கொள்ளாமலே பாடசாலைக்கல்வியை விட்டு வெளியேற்றப்படுகின்றனர்.

❒ இலங்கை பல்கலைக்கழகப்பட்டதாரிகளில் கணிசமான தொகையினர் நவீன தொழில் உலகுக்குத் தேவையான தகைமைகள், திறன்கள் அற்றவர்களாக இருப்பதனால், வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு நீண்டகாலம் காத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கு உதாரணமாக அண்மையில் நடைபெற்ற மேதின ஊர்வலமொன்றில், பட்டதாரி மேலங்கி, தொப்பி அணிந்த ஒருவர் சைக்கிளில் விறகுகளை விற்பனைக்காக கட்டிச்சென்ற காட்சியை குறிப்பிடலாம்.

எல்லாத்தொழிலும் சமனானது எனினும், "பட்டதாரிகள் அவர்களின் தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பின்றியிருத்தலை" அது குறிப்பால் உணர்த்தியிருந்தது. இன்னொரு கோணத்தில் இதனை நோக்கின் "இலங்கைப் பட்டதாரிகள் தற்கால தொழில் உலகுக்குத் தேவையான திறன்களை பாடசாலைகளில் இருந்தும் பல்கலைக்கழகங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது" எனவும் கருதலாம்.

❒ சில வருடங்களுக்கு முன்னர் "ஜனசபா உத்தியோகத்தர்" என்ற பதவி நிலைக்கு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டபோது, தமது கிராம அபிவிருத்திக்கான செயற்றிட்ட முன்மொழிவு ஒன்றினையும் சுயமாக தயாரித்து விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புமாறு கேட்கப்பட்டபோது, பல பட்டதாரிகள் செயற்றிட்ட முன்மொழிவை தயாரிக்க முடியாது இடர்பட்டனர். இதற்காக பல தனியார ரியூசன்கள் பெருமளவு பணத்தை அறவிட்டு வழிகாட்டல் வகுப்புக்களை நடத்தியிருந்தன.

❒ பல்கலைக்கழகத்தில் பயிலும் பல இளநிலைப்பட்டதாரிகளும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களும் தமது கற்கையின் ஒருபகுதியான ஆய்வை, திறம்பட செய்யும் திறனற்றவர்களாக இருக்கின்றார்கள். இதற்கான காரணங்களில் ஒன்றாக, இவர்கள் தமது க.பொ.த. உயர்தர செயற்றிடடத்தினூடாகப் பெறவேண்டிய திறன்களை பாடசாலைகளில் முழுமையாகப் பெறவில்லை என்பதனைக் குறிப்பிடலாம்.

### இலங்கைப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தரசெயற்றிட்டத்தின் தற்போதைய நிலை

மாணவரொருவர் தனியாள் மற்றும் குழுச்செயற்றிட்டத்தை திருப்திகரமாகப பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்பது க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான அடிப்படைத்தகைமைகளில் ஒன்றாக இருக்கின்றது. இருந்தபோதிலும் பாடசாலைகளில் எல்லா மாணவர்களும் திருப்திகரமாக இதனைச்செய்வதில்லை என்பது அனைவராலும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டாகும். சில பிழையான நடைமுறைகளுக்கான உதாரணங்கள் கீழே குறிப்பிடப்படுகின்றது.

❒ பாடசாலையொன்றில், மாணவர்கள், தமது செயற்றிட்ட அறிக்கைகளை கையொப்பம் இடுவதற்காக பாடசாலை அதிபரிடம் கையளித்த போது அவர் அவற்றை விரித்து முகர்ந்து பார்த்தார். ஏனெனில் கடந்த வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்டதெனில் பூச்சியரித்த மணம் அதிலிருக்கும் என்பதை அறிவதற்காக.

பெரும் பாலான பாடசாலைகளில் பயிலும் சில மாணவ, மாணவிகள் அதே பாடசாலையில் அல்லது வேறுபாடசாலையில் முன்னைய் வருடங்களில் சமர்ப்பிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மேலுறைகளை மாற்றிவிட்டு மீண்டும் சமர்ப்பிக்கும் பிழையான பழக்க முடையவர்களாக இருக்கின்றனர்.

❒ அண்மையில் வன்னிப் பாடசாலையொன்றில் மாணவன் ஒருவன், தனது பாடசாலை நூலகத்துக்கு க.பொ.த. உயர்தர தனியாள் செயற்றிட்டத்தினூடாக தனது சொந்த செலவில் மின்னிணைப்பைப் பெற்றுக் கொடுத்துள்ளதாக பத்திரிகைச் செய்தியொன்றில் பாராட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. இதே நடைமுறை பல பாடசாலைகளிலும் பின்பற்றப்படுவதை அவதானிக்கலாம்.

மாணவர்கள் தமது தனியாள் அல்லது குழுச்செயற்றிட்டத்தினூடாக தமது பெற்றோரின் பணத்தில் பாடசாலைக்கு சில சொத்துக்களை வாங்கிக்கொடுத்து வருகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் பொது நோக்கில் பயனுடையவை எனினும் மாணவர்கள் செயற்றிட்டத்தினூடாக அடையவேண்டிய தேர்ச்சிகளை அடைவதற்கு உதவப்போவதில்லை.

❒ க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் பெரும்பாலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை மட்டும் இலக்காகக் கொண்ட இறுதிப்பரீட்சைக்கு தயாராவதையே நோக்காகக்கொண்டு செயற்படுகின்றனர்.

தனியாள் மற்றும் குழுச்செயற்றிட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவதில்லை. பல பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் செயற்றிட்டம் தொடர்பாக எதிர்மறையான மனப்பாங்கை கொண்டிருப்பதை அவதானிக்கலாம். நீண்டகால நோக்கில் வாழ்க்கை விருத்திச்செயற்றிட்டங்களின் பயன்பாட்டை அவர்கள் கருத்திற் கொண்டு செயற்படுவதில்லை.

### இலங்கை கல்வியமைப்பில் "செயற்றிடடம்"அறிமுகமும் விருத்தியும

பாடசாலைகளின் பாடவிதானத்தில் ஒரு பகுதியாகிய செயற்றிட்டம் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நவீன கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் ஒரு அம்சமாகும்.

இது அமெரிக்கா, ஜேர்மன் கல்வித்தொகுதியை மூலமாகக்கெண்டது. 1950 ஆம் ஆண்டுகளில் சில பாடசாலைகளில் சமூகக் கல்விப் பாடத்தில் ஒருவகைச்செயற்றிட்டம் நடைமுறைப படுத்தப்பட்டிருந்தது.

1975, 2000 ஆம் ஆண்டுகளின் கல்விச் சீர்திருத்தங்கள் செயற்றிட்டம் பற்றி அழுத்திக்கூறியிருக்கின்றன. தற்போதைய கல்வியமைப்பின்படி க.பொ.த. உ.தரத்தில் கல்வி பயிலும் எல்லா மாணவர்களும் தனிப்பட்ட செயற்றிட்டம், குழுச்செயற்றிட்டம் என்ற இரண்டு செயற்றிட்டங்களைச்செய்து முடித்தல் வேண்டும்.

### தனியாள் செயற்றிட்டம்

தனியாள் செயற்றிட்டத்தை நடை முறைப்படுத்துவதற்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தெரிவு செய்யப்பட்டு அது பாடசாலையின் செயற்றிட்டக் குழுவினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

தரம் 12 இல் முதலாம், இரண்டாம் தவணைகளுள் இச் செயற்றிட்டம் நிறைவு செய்யப்படுவதுடன், வகுப்புப் பொறுப்பாசிரியர் அல்லது பாடப் பொறுப்பாசிரியர் இதற்குரிய வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும்.

தளியாள் செயற்றிட்டத்தில் ஈடுபடுவதனூடாக மாணவர்கள் தமது சுய ஆற்றலை வெளிப்படுத்தக் கூடியதாயிருப்பதுடன், நேரடியாகப் பல்வேறு நிறுவனங்களுடனும் சமூகத்துடனும் தொடர்பினைப் பேணவும் பல்வேறு தனிநபர்களுடன் செயற்படுதல் பற்றிய விளக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதலுமே எதிர்பார்க்கப்படுகிறது.

### குழுச்செயற்றிட்டம்

குழுச் செயற்றிட்டத்துக்காகப் பாடசாலை மாணவர் 10 பேர் அடங்கிய குழுக்கள் பாடசாலை செயற்றிட்டக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும். இக் குழுக்கள் பாடசாலையின் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலைத்துறை மூன்றையும் பிரதிநி தித்துவப்படுத்தும் விதத்தில் அமைக்கப்படுதல் வேண்டும்.

### செயற்றிட்டக்கணிப்பீடு

ஐந்து நியதிகளின் கீழ் செயற்றிட்டக் கணிப்பீடு செய்யப்படுவதுடன் செயற்றிட்டத்துக்கான பொறுப்பாசிரியர் குழு ஒவ்வொரு நியதிகளுக்கும் அமைய மாணவர் செயற்பட்டுள்ள விதத்தை அவதானித்து புள்ளி வழங்குதலை மேற்கொள்ள வேண்டும் இந்த செயற்றிட்டங்களுக்காக இறுதிப் புள்ளியாக 20 வழங்கப்படுவதுடன் அப்புள்ளி 10 இற்கு மாற்றப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு வழங்கப்படும்.



## கல்வித் தரிசனம்

### சில வழிகாட்டல்கள்

கட்டுரையாளர் 14.05.2014 அன்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்கு நடத்திய வாழ்க்கை விருத்திச் செயற்றிட்ட செயலமர்வு அனுபவத்தின் அடிப்படையில், எதிர்காலத்தில் ஏனைய பாடசாலைகளின் க.பொ.த. உயர்தர மாணவர்கள், தமது வாழ்க்கை விருத்திச் செயற்றிட்டங்களினை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக சில வழிகாட்டல்கள், கேள்வி-பதில் மூலமாக வழங்கப்படுகின்றது. இது பாடசாலைகளில் செயற்றிட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் செயற்றிட்டங்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்களுக்கும் பயனுடையதாக அமையும்.

### செயற்றிட்டம் என்றால் என்ன?

ஒரு குறிக்கப்பட்ட வேலையை தரப்பட்ட கால வரையறைக்குள் நிறைவேற்று வதற்காக செயற்படுத்தப்படும் ஒருதொகுதி செயற்பாடுகளை செயற்றிட்டமென வரைவிலக்கணப்படுத்தலாம். இலங்கையில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் தனியாள் மற்றும் குழுச் செயற்றிட்டங்களினூடாக மாணவர்களின் திட்டமிடல், செய்தல், குறிப்பிட்ட காலத்தில் முடிவுறுத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய திறன்கள் மதிப்பிடப்படுகின்றது.

### செயற்றிட்ட வகைகள் எவை? உதாரணங்களைக் குறிப்பிடுக.

1. ஆய்வுவகை செயற்றிட்டம்
   - வீட்டுத்தோட்டத்தில் பல்வேறு பறவைகளைப்பற்றி ஆராய்தல்,
   - சமுதாய குடும்ப அலகில் வருமானம்
2. பிரச்சினைவகைச்செயற்றிட்டங்கள்
   - பாடசாலைகளில் மாணவர் தொகை வீழ்ச்சியடைதல்
   - இலங்கையில் மூளைசாலிகள் வெளியேற்றம்
   - மிருகங்களின் நடத்தை மாற்றங்களை வைத்து காலநிலை எதிர்வுகூறல்
3. ஆக்கவகைச்செயற்றிட்டம்
   - கவி, நாடகம், சிறுமீட்டல்
   - முத்திரைகளை அல்லது சிறு அலங்காரப் பொருட்களைச் சேகரித்தல்
4. தொழில்நுட்ப அடிப்படைச் செயற்றிட்டம்
   - கருவி விருத்தி, உபகரண விருத்தி, பொறி அமைப்பு நிர்மாணிப்பு
5. பொருளாதாரரீதியில் பயனுறுதிமிக்க செயற்றிட்டங்கள்
   - மலர்ச்செடித்தோட்டத்தை நடத்துதல்
   - பாடசாலைகளில் மருத்துவ மூலிகைகளை அல்லது காளான்களை நடுதல்
   - வீட்டுத்தோட்டம் அமைத்தல்
   - அலங்கார மீன்வகைகளை வீட்டில் வளர்த்தல்
6. ஆய்வு அபிவிருத்தி செயற்றிட்டம்

### செயற்றிட்டத்தை செயற்படுத்த முதலில் என்ன செய்ய வேண்டும்?

பாடசாலையில் செயற்றிட்டத்துக்கு பொறுப்பான ஆசிரியருடன் கலந்துரையாடவும். செயற்றிட்டம் தொடர்பான வழிகாட்டல் செயலமர்வுகளில் கலந்துகொள்ளவும். பாடசாலை அதிபர், செயற்றிட்ட பொறுப்பாசிரியர்கள் இவற்றை பாடசாலையில் ஒழுங்கு செய்ய வேண்டும்.

மற்றும் முன்னைய வருடங்களில் கற்ற சிரேஷ்ட மாணவர்களுடன் கலந்துரையாடல். பயனுள்ள நல்ல செயற்றிட்டத்தை செய்யாத சிரேஷ்ட மாணவர்களிடம் இதுபற்றிக் கேட்க வேண்டாம்.

ஏனெனில் "செயற்றிட்டம் பயனற்றது" என்ற எண்ணத்தை அவர்கள் எப்போதும் கொண்டிருப்பர்.

செயற்றிட்டம் செய்ய முன்னரே இவ்வாறான எண்ணம் தோன்றினால், செயுற்றிட்டம் செய்வதனால் கிடைக்கும் நல்ல அனுபவத்தை நீங்கள் இழப்பீர்கள். (தொடரும்)

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்



**40**

...பச்சைத்தாவணி கட்டிய பருவ வயல்கள்- காற்றோடு தமிழில் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் தென்னை மரங்கள்- அசரீரி பாடும் குயில்கள்- கரைகளுக்கு நீதிமொழி சொல்லிக் கொண்டே நடந்து போகும் நதிகள்- இவைகளிலெல்லாம் நான் கரைந்த அளவுக்குப் பெரியார்தாசனும் கரைந்தார்.

இருவரும் அத்வைதம் அடைந்தோம்.

தென்னந்தோப்புக்குள் ஒரு மேட்டிலிருந்து பள்ளத்தில் குதித்தேன்.

அவரும் குதித்தார்.

குதித்தவர் சுருண்டு விட்டார்.

கால் சுளுக்கிவிட்டது.

உயிர் வலிக்க உட்கார்ந்தார்.

கால் வீங்கிவிட்டது; கைத்தாங்கலாய் அழைத்து வந்து வைத்தியம் பார்த்தோம்.

காருக்குள் கலக்கத்தோடு வந்து கொண்டிருந்த என்னைப் பார்த்து, "என்ன கவிஞர்... ஒரு மாதிரியிருக்கிறீர்கள்?" என்றார்.

"உங்களை இலக்கியவாதியாய் அழைத்துவந்து சுளுக்கியவாதியாய் அழைத்துப் போகிறேனே அதனால்தான்" என்றேன்.

வலிமறந்து சிரித்தார்; கார் குலுங்கச் சிரித்தார்; சிரித்து விட்டுச் சொன்னார்:

"இப்படி ஒரு வாசகம் கிடைக்குமென்றால் நான் இன்னொரு முறையும் குதிக்கத் தயாராயிருக்கிறேன்."

நல்ல எழுத்தாளர் பெரியார்தாசன்.

அறிவும் நகைச்சுவையும் ஜடை போட்டுக் கொண்டு நடைபோட்டுக் கொண்டிருக்கும் அவர் எழுத்தில்.

"சிந்தியுங்கள்" என்று ஒரு புத்தகம் எழுதினார்.

அதைக் காணிக்கையாக்கினார்.

எப்படி?

இப்படி.

"இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளின் கருப்பொருட்களை நான் நடு இரவுகளில்தான் சிந்தித்திருக்கிறேன்.




அந்த நடுநிசிகளில் என்னைத் தூங்க விடாமல் கடித்துக்குதறி எழுப்பி விட்டவை எங்கள் வீட்டுக் கொசுக்களே.

'தூக்கம்போன ஆத்திரத்தில் அவைகளில் சிலவற்றை அடித்துக் கொன்றிருக்கிறேன்.

அவைகள் என்னை எழுப்பாவிடில் இந்தக் கட்டுரைக்கான சிந்தனைகள் எழாமல் போயிருக்கக்கூடும்.

அந்த இரவுகளில் என்னைச் சிந்திக்க வைத்துவிட்டு என்னிடம் அடிபட்டு மரணித்துப் போன அந்தக் கொசுக்களுக்கும் அவற்றின் வளர்ச்சியில் அக்கறை காட்டி அவற்றை அழிக்க எந்த முயற்சியும் எடுக்காமலிருக்கும் நமது சென்னை மாநகராட்சிக்கும் இதைக் காணிக்கையாக்கி வருந்துகிறேன்."

அவரால் சோகத்தில் நகைச்சுவை பிழியவும் முடியும்; நகைச்சுவையில் சோகம் பிழியவும் முடியும்.

அறிவுக்கும் பகுத்தறிவுக்கும் உள்ள வேறுபாட்டைத் தன் சொற்பொழிவொன்றில் சுட்டிக் காட்டுகிறார் பெரியார்தாசன்:

"**தூக்கணாங்குருவி கூடு கட்டுகிறது. இன்னும் ஆயிரமாயிரம் ஆண்டுகளானாலும் குருவி கூடுதான் கட்டும். லிப்ட் போட்டு வீடு கட்டப் போவதில்லை. அதன் அறிவு அவ்வளவுதான்.**

**ஆனால் குகையில் வாழ்ந்த மனிதன் விண்வெளியில் வீடு கட்டுமளவிற்கு வளர்ந்திருக்கிறான். காரணம் குருவிக்கு இருப்பது அறிவு; மனிதனுக்கு இருப்பது பகுத்தறிவு.**"

எதிர்காலத்தில் பெரியார்தாசன் ஞானவீடுகள் கட்டுவார்; அவர் பகுத்தறிவாளர்.

(தொடரும்)

**-வைரமுத்து-**

# வரலாற்று பிழைகளை சரி செய்ய இரண்டாயிரத்து 500 கோடி கடன்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

(கொழும்பு)

மாணவர்களுக்கேற்பட்ட வரலாற்றுப் பிழையை சரிசெய்வதற்காக ஜனாதிபதி ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 2ஆயிரத்து 500 கோடி ரூபா கடனாகப் பெற்றுள்ளார்.

ஈட்டியையும் அம்பையும் கையிலெடுத்த எமது ஆதிவாசிகளுக்கு 40 கணனிகள் கொடுக்கப்பட்டுள்ளன என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

பத்தரமுல்ல சுபூதி வித்தியாலயத்தில் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை திறந்து வைத்து உரையாற்றியே போதே அவர் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

கல்வியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுக்கூடத்துடன் கூடிய மஹிந்தோதய அபிவிருத்திப் பாடசாலைகளுக்கு சென்றால் தெரியும். இன்றைய உலகத்திற்கேற்றாற் போல நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தொழில்நுட்பத்திகேற்றாற் போல மாறவேண்டும்.

தற்போது நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்ற புதிய மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுக் கூடங்களை திறந்து வைக்க நேரம் போதாதுள்ளது. பாடசாலைகளுக்கிடையில் வளத்தை பகிர்ந்தளிக்கும் மஹிந்த சிந்தனையின் கொள்கை தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

- கன்னங்கர சிந்தனையினூடாக இலவச கல்வி ஏழைகளுக்கான நிரந்தர உரிமையாக மாற்றப்பட்ட போதிலும் சர்வதேச பாடசாலைகளில் பயிலும் மாணவர்களுக்கு இலவச கல்வியை உரிமையாக்கப் போவதாக கூறவில்லை. இலவச கல்வியை தொடர்ச்சியாக வளர்ச்சிப் பாதையில் இட்டுச் சென்ற ஒரே அரசு மஹிந்த ராஜபக்ஷ அரசுதான்.

இந்நிகழ்விற்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உட்பட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். (அ)

# வன்முறைகளின் பின்னணியில் அரசாங்கமே செயற்படுகின்றது

## மங்கள எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

இன வன்முறைகளின் பின்னணியில் அரசாங்கமே செயறப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் கலகங்களுக்கு அமெரிக்காவோ அல்லது சவுதி அரேபியாவோ பொறுப்பு ஏற்க வேண்டிய அவசியமில்லை.

வன்முறைகளில் ஈடுபட்ட 13 பேரை விடுதலை செய்யுமாறு உயர் மட்டத்திலிருந்து பொலிஸாருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது.

இவ்வாறான நிலைமைகளின் போது பொலிஸார் நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

கொழும்பில் இருந்து கொண்டு அறிக்கைகளை வெளியிடாது தர்கா நகருக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பார்வையிட வேண்டும்.

நாட்டில் நிலவி வரும் முக்கிய பிரச்சினைகளை மூடி மறைத்து முஸ்லிம் கடும்போக்குவாதம் நிலவி வருவதாக பிரசாரம் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)





நெல்லியடி மத்திய கல்லூரி மஹிந்தோதய தொழில்நுட்பபீட அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதன் போது அமைச்சர் அடிக்கல்லினை நாட்டி வைப்பதையும் பாடசாலை நிர்வாகம் மூலமாக நினைவுச்சின்னம் வழங்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன அழிப்பைத் தொடர்ந்து மத அழிப்பு...!

தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்களை சிங்களவர்கள் இன்றும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறார்கள். அதோடு, முஸ்லிம்கள் மீதும் தொடர் தாக்குதலைத் தொடங்கிவிட்டனர். சர்வதேச நாடுகளும் இந்தத் தாக்குதலை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

திடீரென முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் ஏன்? இவ்வளவு பெரிய பிரச்சினை எதனால் நடந்தது? என இலங்கையில் இருக்கும் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமா- அத் துணைச் செயலாளர் ரஸ்மினிடம் கேட்டோம்.

**கடந்த சில ஆண்டுகளாகவே தமிழர்கள் என்றாலோ, முஸ்லிம்கள் என்றாலோ இங்கு இருக்கும் சிங்களவர்களுக்கும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிடிப்பது இல்லை. எங்கள் நிம்மதியை மெள்ள மெள்ள பறித்துக் கொண்டு இருக்கிறார்கள்.**

இப்போது பிரச்சினை வெடித்ததற்குக் காரணமே ஒரு புத்த பிக்குவால்தான். ஒன்றுமே நடக்காத விடயத்தைப் பெரிதுபடுத்தி முஸ்லிம்கள்மீது தாக்குதல் நடத்தி, இதுவரை மூன்று முஸ்லிம்களை துப்பாக்கியால் சுட்டும் ஆயுதங்களால் தாக்கியும் கொலைசெய்து இருக்கிறார்கள்.

கடந்த 12 ஆம் திகதி அளுத்கம பகுதியில் ஒரு புத்த பிக்கு வந்த காரும் ஒரு முஸ்லிம் ஓட்டிவந்த காரும் எதிர்பாராத விதமாக மோதி, சிறிய விபத்து நடந்தது.

இதனால், புத்தபிக்குவின் வாகன ஓட்டுநருக்கும் முஸ்லிம் நபருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, இறுதியில் புத்தபிக்குவை அந்த முஸ்லிம் நபர் தாக்கிவிட்டதாக செய்தியைப் பரப்பி, பிரச்சினையைத் திசை திருப்பினார்கள்.

இதனால் இரண்டு முஸ்லிம்களை பொலிஸ் அதிகாரிகள் கைது செய்தார்கள்.

**★ கடந்த சில ஆண்டுகளாகவே தமிழர்கள் என்றாலோ, முஸ்லிம்கள் என்றாலோ இங்கு இருக்கும் சிங்களவர்களுக்கும் புத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிடிப்பது இல்லை. எங்கள் நிம்மதியை மெள்ள மெள்ள பறித்துக் கொண்டு இருக்கிறார்கள்.**

**★ எங்களைத் தாக்க வேண்டும்; எங்கள் உடைமைகளை அழிக்க வேண்டும் என்று நன்கு திட்டமிட்டே சதித்திட்டம் தீட்டி செயற்படுகிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.**

**★ திடீரென முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் ஏன்? இவ்வளவு பெரிய பிரச்சினை எதனால் நடந்தது?**

**★ இந்தத் தாக்குதலுக்கு இலங்கை அரசு உடந்தையா? புத்த பிக்குகள் வன்முறையைத் தூண்டும் விதத்தில் பேசிய போதும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையே ஏன்?**

**★ ஜனநாயக வழியில் ஆர்ப்பாட்டம் என்றவர்களிடம் ஆயுதம் வந்தது எப்படி. பலத்த பாது காப்புக்கு மத்தியில் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் போது, கலவரக்காரர்கள் மட்டும் சுதந்திரமாக நடமாடியது எப்படி? உயிர்ச் சேதங்கள், பொருட் சேதங்கள் ஏற்பட்ட போதும் அதிகார வர்க்கம் கைகட்டி நின்றது ஏன்?**

**★ யாருக்குமே நிம்மதி இல்லாத நாடாக இலங்கை மாறிக் கொண்டு இருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்**

இதைக் காரணமாக வைத்து, பொதுபல சேனா என்று புத்த அமைப்பு, [illegible] மிகப்பெரும் [illegible] நடத்தப் போவதாக அறிவித்தது.




முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்...

பொலிஸ்காரர்கள் இருக்கும்போதே முஸ்லிம்களின் வீடுகள் மீது கல் எறியத் தொடங்கினார்கள். தீயிட்டுக் கொளுத்தினார்கள். முஸ்லிம்கள் நடத்திவரும் கடைகளையும் பள்ளிவாசல்களையும்கூட. தீயிட்டுக் கொளுத்தினர்.



இலங்கையில் உள்ள முஸ்லிம்களைக் கருவறுக்கும் நோக்கில் 1,000 இற்கும் மேற்பட்டவர்களை ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் திரட்டினார்கள். தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ பத்து, இருபது பேர் சேர்ந்து சின்ன ஆர்ப்பாட்டம் செய்யக்கூட அரசு அனுமதி வழங்காது. கேட்டால், சட்டம், ஒழுங்கு கெட்டுவிடும் என்று சொல்லும்.

ஆனால், இவர்களுக்கு மட்டும் ஏன் இவ்வளவு பாதுகாப்புடன் ஆர்ப்பாட்டம் செய்ய அனுமதி தருகிறார்கள் என்று தெரியவில்லை.

இவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்துக்கு சுமார் 2,000 இற்கும் மேற்பட்ட பொலிஸ்காரர்கள் பாதுகாப்பு வழங்கினார்கள்.

[illegible] சூழ்நிலை சீர்கெடுவதற்கு முன்பே சுதாரித்து ஆர்ப்பாட்டத்தைத் தடை செய்திருந்தால், பிரச்சினைகள் வளர்ந்து இருக்காது. அவர்கள் ஆர்ப்பாட்டம் என்று அறிவித்த உடனேயே, அங்கு இருக்கும் பள்ளிவாசல்களுக்குப் போய் எல்லோரும் தஞ்சம் அடைந்தோம்.

அளுத்கம தர்கா நகருக்கு மத்தியில் அமைந்துள்ள சீனவத்த பகுதியில் இருந்த பல முஸ்லிம்களின் வீடுகளை கல்வீசி தாக்கினர். அதோடு, பள்ளிவாசலில் குழுமியிருந்த முஸ்லிம்களை அருவருப்பான வசனங்களால் திட்டினார்கள்.

இதனால், இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டு, தொடர்ந்து பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

15 ஆம் திகதி மாலை 6.45 மணியளவில் அளுத்கம பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தனர். ஊரடங்கு உத்தரவைத் தொடர்ந்து பள்ளியில் ஒன்று குழுமியிருந்த முஸ்லிம்களால் தங்கள் வீடுகளுக்குக் கூட செல்ல முடியாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

அதிகார வர்க்கத்தின் ஆதரவுடன்தான் முஸ்லிம் களுக்கு எதிராக இனவாதத்தை உண்டு செய்கிறார்கள். அளுத்கம, தர்கா நகர், வெல்பிட்டிய, அதிகரிகொட ஆகிய பகுதிகளில் இன்றும் தொடர்ந்து எங்களைத் தாக்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.


(தொடரும்...)

யூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை கண்டறிய அரசு ஒத்துழைக்க வேண்டும்

## மன்னார் ஆயர் கோரிக்கை



2015 ஆம் ஆண்டு ஜனவரி மாத நடுப்பகுதியில் பாப் பரசர் பிரான்சிஸ் இலங்கை வந்து போரால் பாதிக்கப் பட்ட மக்களைச் சந்திக்கவுள்ளார்.

எனவே, இதற்கு முன்னர் ஐ.நா. விசாரணைக்குழுவை இலங்கைக் குள் அனுமதித்து உண்மையைக் கண்டறிய அரசு வழிவிடவேண்டும்.

அப்போதுதான் நாட்டில் சமாதா னம், நல்லிணக்கம் ஏற்படுவதற் குரிய சூழல் உருவாகும். பாப்பரசரின் இலங்கை வருகையும் பயனுள்ளதாக அமையும்.

இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக் குரிய இராயப்பு தெரிவித்தார்.

தெற்கில் முஸ்லிம் சகோதரர்கள் மீதான தாக்குதலின் பின்னணியில் பொதுபலசேனா அமைப்பினர், சிங்களப் பேரினவாதிகள் மற்றும் அரச படை கள் உள்ளனர் என்றும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில், அன்று தமிழ் மக்கள் தாக் குதல்களுக்கு உள்ளாகினர். இன்று தமிழர்களின் சகோதரர்களான முஸ் லிம்களும் தாக்குதலுக்கு உள்ளாகுகின் றனர். அவர்களின் சொத்துகள் தீயிட்டு அழிக்கப்பட்டு வருகின்றன.

முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்து பவர்கள் இதுவரை கைது செய்யப்பட வில்லை. குற்றவாளிகளை அரசு நீதி யன்முன் நிறுத்தாமல் இருப்பதால் தாக் குதல் நடத்துபவர்கள் யாராக இருப்பார் கள் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளலாம்.

இலங்கையில் அன்றும் இன்றும் கலவரங்கள் திட்டமிட்டே அரங்கேற் றப்பட்டு வருகின்றன. இதனால் நாட் டுக்குத்தான் அபகீர்த்தி. எனவே, தீய சக்திகளை அரசு உடன் கைதுசெய்ய வேண்டும். தீய சக்திகள் சட்டத்தைக் கையிலெடுக்க அரசு ஒருபோதும் இட மளிக்கக்கூடாது.

இதேவேளை, பாப்பரசர் பிரான்சிஸ் 2015 ஜனவரியில் இலங்கை வரவுள் ளார். இலங்கை கத்தோலிக்கத் திருச் 'சபையின் ஆயர்களுக்கும் பாப்பரசர் பிரான்சிசுக்கும் வத்திக்கானில் அண் மையில் நடைபெற்ற சந்திப்பில் வடக்கு, கிழக்கு ஆயர்களின் வேண்டு கோளுக கிணங்க பாப்பரசரின் இலங்கை விஜயம் உறுதிசெய்யப்பட்டது.

இந்தச் சந்திப்பில் நானும் கலந்து கொண்டேன். இதன்போது இங்கு போரால் தமிழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் , அவலங்கள், நாட்டில் நடைபெறும் இனரீதியான, மத ரீதியான பிரச்சினைகள் தொடர்பில் பாப்பரசரிடம் விளக்கிக் கூறினோம்.

இந் நிலையில், ஜனவரியில் இலங்கை வரும் பாப்பரசர், போரால பாதிக்கப்பட்ட மக்களையும் சந்திக்க வுள்ளார். எனவே, இதற்கு முன்னர் ஐ.நா. விசாரணைக்குழுவை இலங்கை க்குள் அனுமதித்து இங்கு நடை பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் உண்மையைக் கண்டறிய அரசு வழி விட வேண்டும். அப்போதுதான் நாட் டில் சமாதானம், நல்லிணக்கம் ஏற்படு வதற்குரிய சூழல் உருவாகும். பாப்பர சரின் இலங்கை வருகையும் பயனுள் ளதாக அமையுமென மன்னார் ஆயர் தெரிவித்தார். (அ)

## யாசகர்களுக்கு 6000 ரூபா வருமானம்

இலங்கையிலுள்ள யாசகர்கள் நாளொன்றுக்கு 5ஆயிரம் ரூபா முதல் 6ஆயிரம் ரூபா வரையில் வருமானமாக பெறுவதாக தெரிவிக் கப்படுகிறது.

சமூக சேவைகள் திணைக் களத்தால மேற்கொள்ளப்பட்ட ஆய் வொன்றின் மூலமே இத் தகவல் வெளியானதாக மேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத் தின் தலைவி சம்பிகா ஷிரோமாலி தெரிவித்துள்ளார்.

பெற்றோரால் வீதிகளில் கைவிடப் படும் சிறுவர்கள் தொடர்பில் நடத் திய ஆய்வொன்றின் போதே இத் தகவல் வெளியானதாக அவர் மேலும் கூறினார். (அ)

## மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

### ஜெயா மீண்டும் மோடிக்கு கடிதம்

கச்சதீவு தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இந்திய மத்திய அரசாங்கத்திற்கு மீண்டும் கடித மொன்றை அனுப்பி வைத் துள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் 64 இந்திய மீனவர்களை கைது செய்துள் ளதாகவும் அவர்களின் 38 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ள தாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்களையும் அவர் களது படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.


கடந்த 19ஆம் திகதி ஏழு இந்திய மீனவர்களையும் திங்கட்கிழமை மேலும் 11 இந்திய மீனவர்களை யும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு, கச்சதீவை மீட்டெடுப்பதே என ஜெயலலிதா வலியுறுத்தியுள் ளார்.

1974 மற்றும் 1976ஆம் ஆண்டு களில் இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டு இந்திய மீன வர்களின் மரபு ரீதியான வாழ்வா தாரத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசிய மானது என ஜெயலலிதா, பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரியுள் ளார். (அ)

# எம் மீதான குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்டுங்கள்

## பொதுபல சேனா சவால்



(கொழும்பு)

முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்கு எம்மீது குற்றம் சாட்டுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கல கொட அத்தே ஞானசார தேரர் தெரிவித் துள்ளார்.

எம்மீதான குற்றச் சாட்டுக்களை ஆதாரத்துடன் நிரூபித்து காட்டுங்கள என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளின் செயற்பாடுக ளால் பொதுமக்களின் சொத்துக்கள் நாசப்படுத்தப்படுவது கண்டிக்கத்தக்க விடயம் எனவும் அவர் கூறினார்.

அளுத்கம சம்பவம் மற்றும் அதன் பின்னர் இடம்பெற்ற சில தாக்குதல் சமபவங்களில் பொதுபல சேனா பௌத்த அமைப்பிற்கு தொடர்புள்ளதென முஸ் லிம் கட்சிகள், அமைப்புகள் மற்றும் அமைச்சரகள் சிலர் குற்றம் சுமத்தி யுள்ள நிலையில் அது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அளுத்கம சம்பவத்திற்கும் எமது அமைப்பிற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென ஆரம்பத்தில் இருந்தே கூறி வருகின்றோம். எனினும் எம் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி எம்மை இழிவுபடுத்தும் செயலை எவரும் செய்ய வேண்டாம்.

முஸ்லிம் மத தீவிரவாதிகளுக்கு எதிராக நாம் குரல் கொடுக்கின்றமை யினால் பொதுபல சேனா அமைப்பு இனவாத அமைப்பாகாது.

இன்றும் பல இஸ்லாமிய மதத் தவர்கள் எமது உதவிகளை நாடியும் எமது பாதுகாப்பினை கேட்டும் வரு கின்றனர். அவர்களுக்கு எவ்வித தயக் கமும் இன்றி நாம் உதவி செய்கின் றோம்.

நாட்டில் சிங்கள பௌத்த மக்கள் எவ்வாறு உரிமைகளை அனுபவிக்க முடியுமோ அதே உரிமைகளும் சுதந்திரமும் தமிழ், முஸ்லிம் மக்க ளுக்கும் உண்டு.

எனினும் முஸ்லிம் மத வாதத் தினையும் தீவிர வாதத்தினையும் பரப்பி சிங்கள, தமிழ் இனத்தை அழிக்கும் தீவிரவாத செயலுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். அதேபோல் அளுத்கம சம்பவத்தில் பொதுபல சேனா அமைப்பினர் தொடர்பு பட்டுள்ளனர் என்றால் அதனை ஆதா ரங்களுடன் நிரூபித்து காட்டவேண் டும்.

முஸ்லிம் கட்சிகளும் ஊடகங்க ளும் எம்மை சாடுவதனால் சிங்கள பௌத்த மக்கள் எம்மை நிராகரிக்கப் போவதில்லை.

மத்திய கிழக்கில் சென்று தீவிர வாத தலைவர்களை சந்தித்து முஸ் லிம் தீவிரவாதக் கொள்கைகளை இலங்கைக்குள் பரப்பியது இந்த முஸ்லிம் கட்சிகளினதும் அமைப்புக் களினதும் தலைவர்களேயாவர்.

முதலில் அவர்களை அரசாங்கம் தண்டிக்காது எம்மை சாடுவதை நாம் கண்டிக்கின்றோம்.

முஸ்லிம் தீவிரவாத செயற்பாடுகள் அதிகளவில் பரப்பப்பட்டு வருகின்றது. அப்பாவி முஸ்லிம் மக்களை மத தீவிர வாதத்திற்குள் உட்படுத்தி நாட்டிற்கு எதிராக ஏவி விடும் செயலை முஸ் லிம் அமைப்புக்கள் செய்கின்றன. இதுவே நாட்டில் இனக்கலவரம் ஏற்படவும் மோதல்கள் உருவாகவும் காரணமாகவும் அமைந்துள்ளது.

தீவிரவாதிகளின் வன்முறை களினால் அப்பாவி பொதுமக்களின் சொத்துக்கள் சேதமாகின்றன. அதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

## இன்று ஒரு தகவல்

### வெற்றியின் இரகசியம்

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்கு தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்.

இதிலுள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் இந்தக் கதையை நீங்கள் படியுங்கள்.

ஜப்பானில் பெரிய வீரர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா.

அவரிடம் படைவீரர்கள் அதிகளவில் இல்லை. சிறிய படைப்பலத்தை வைத்துக் கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் அவர் முறியடித்திருக்கிறார்.

அவ்வளவு சாமர்த்தியம் உள்ளவர் நொபுநாகா.

ஒரு சமயம் அவர் எதிரியின் மீது படையெடுத்துச் சென்றிருந்தார்.

அப்போது அவருடைய படைவீரர்களுக்கும் தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

இந்தப் போரில் நாம் வெற்றி பெற முடியுமா? என்பது தான் அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகம்.

இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிப்பது?

மிகவும் யோசனை செய்தார்கள். கடைசியாக துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மெதுவாக கேட்டு விட்டார்கள்.

தலைவர் நொபுநாகா பார்த்தார். அவர், "சரி! அதை நாம் முடிவு செய்ய வேண்டாம். புத்த விகாரைக்குப் போய் விட்டு வருவோம்" 'பூவா, தலையா' போட்டுப் பார்ப்போம். என்ன வருகிறதோ அதன்படி செயற் படுவோம். ஏனென்றால் போருக்குச் செல்லும் போது முழு மனத்தோடு போக வேண்டும். மனதில் தடுமாற்றம் இருக்கக் கூடாது" என்று கூறினார்.

அவர் கூறியதற்கு தளபதியும் படைவீரர்களும் "சரி" என ஒப்புக் கொண்டார்கள்.

உடனே அவர்கள் எல்லோரும் அங்கே இருந்த கோவிலுக்கு சென்றார்கள்.

தலைவர் உள்ளே சென்றார். நீண்ட நேரத்தின் பின்னர் தலைவர் நொபுநாகா வெளியே வந்தார்.

அவர் தளபதி-துணைத் தளபதிகள் எல்லோரையும் அருகில் அழைத்தார்.

அவர்கள் முன்னிலையில் ஒரு தங்கக்காசை எடுத்தார். "இதோ பாருங்கள்... இப்போது 'பூவா, தலையா' போட்டுப் பார்க்கலாம். பூ வந்தால் தோற்று விடுவோம். தலை வந்தால் வெற்றி பெறுவோம். பூ விழுந்தால் போர் வேண்டாம்... அதை தவிர்த்து விடுவோம். தலை விழுந்தால் போருக்கு போவோம். விதி இப்போது நம் கையில் தான் இருக்கிறது. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்கிறதோ அதன்படியே நாம் நடந்து கொள் வோம்" என்று கூறி தங்கக் காசைச் சுண்டினார்.

அது சுழன்று மேலே போய் "கணீர்" என்று தரையில் விழுந்திருந்தது.

எல்லோரும் ஆவலோடு அதைக் குனிந்து பார்த் தார்கள். தலைதான் விழுந்து கிடந்தது.

அனைவருக்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம்... அதன் பின் அவர்களுக்குப் போருக்குப் போவதா வேண்டாமா? என்ற சந்தேகம் வரவில்லை.

எல்லோரும் உறுதியான முடிவோடு போருக்குச் சென்றார்கள். வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

அப்போது தளபதி உரை நிகழ்த்தினார்.

அதில் அவர் "இந்த வெற்றியைத் தங்க நாணயம் தான் முடிவு செய்தது... அதனால் விதியை யாராலும் வெல்ல முடியும்?" என்று கூறினார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? வெற்றியின் இரகசியம் என்ன? மனவுறுதிதான்.

எதைச் செய்தாலும் மனக்குழப்பம் இருக்கக் கூடாது. "எண்ணித் துணிகருமம்" இது வள்ளுவர் வாக்கு.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல துறைகளையும் உள்ளடக்கி பொருளாதார தொகை மதிப்பீடு

(கொழும்பு)

இலங்கையில் சகல துறைகளும் உள்ளடங்கும் வகையிலான பொருளாதார தொகை மதிப்பீடுகள் இவ்வருடத்தில் இடம்பெறவுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சி.எ.குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வளர்ச்சியடைந்த நாடுகளைப் போன்று இலங்கையிலும் தற்போது மொத்த தேசிய உற்பத்திக்குச் சேவைகள் துறையின் பங்களிப்பு முதன்மை நிலையை அடைந்துள்ளது.

2014 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக் கெடுப்பிற்கமைய தற்போது விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகள் மொத்தத் தேசிய உற்பத்திக்கு வழங்கும் பங்களிப்பு முறையே 12%, 33% மற்றும் 56% சதவீதமாகும்.

இவ்வாறான அதிக வளர்ச்சியடைந்துள்ள நாடுகளைப் போன்று இலங்கையிலும் பொருளாதார கட்டமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களை கருத்திற் கொண்டு விவசாயம், கைத்தொழில் என இரு தொகை மதிப்புக்களை வெவ்வேறாகக் கொள்ளாமல் சகல துறைகளையும் உள்ளடக்கி பொருளாதார தொகை மதிப்பினை இவ்வருடத்தில் (2013/2014) முன்னெடுக்க சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

பொருளாதார தொகை மதிப்பு 4 கட்டங்களாக நடத்தப்படவுள்ளன. முதலாவதாக இலங்கையிலுள்ள அனைத்துப் பெருந்தோட்டங்களும் 2013 ஆம் ஆண்டு ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் நடத்தப்பட்டன.

இரண்டாவது கட்டத்தின் கீழ் சகல கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சேவைக் கூறுகள் இவ் வருட ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் நடைபெறவுள்ளன.

அதற்கமைய தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பொருளாதார தொகைமதிப்பின் மூன்றாவது கட்டத்தின் கீழ் சகல பாரிய விவசாய நிலப்பிரிவுகளும் அதாவது பெருந்தோட்டங்கள் மற்றும் சிறு நில விவசாயப்பிரிவுகள் உள்ளடங்கும் வகையில் விவசாயச் செய்கையாளர்கள், விவசாயச் செய்கையாளர்களின் குடித்தனம் தொடர்பான தகவல்கள், நிலப் பண்பாடு மற்றும் நிலவுடைமை, நன்னீர், உவர்நீர், மீன் உற்பத்தி போன்ற விடயங்களுக்குரிய தகவல்கள் விவசாயத் துறைக்கமைவாகச் சேகரிக்கப்படும்.

மேலும் இந்தக் கட்டத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் அந்தந்தக் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவில் காணப்படும் விவசாயத்துறைக்குரிய வசதிகள், விசேட வினாக்கொத்துக்களைப் பயன்படுத்தி சேகரிக்கப்படும்.

இதனைவிட தெரிவு செய்யப்பட்ட 28 ஆயிரம் குடும்பங்களை மாதிரி அளவீட்டிற்கு உட்படுத்தி உணவுப் பாதுகாப்புத் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## மீனவர்களை விடுவிக்க இராஜதந்திர வழிமுறை

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுதலை செய்ய இராஜதந்திர அணுகுமுறைகள் பின்பற்றப் படும் என இந்திய மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுதலை செய்ய இராஜதந்திர ரீதியான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சயிட் அபூபக்கர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களைப் போன்றே இந்த தடவையும் மீனவர்களை விடுதலை செய்வதற்கு இராஜதந்திர வழிமுறைகள் பின்பற்றப்படவுள்ளதாகவும் தமிழக மீனவர் பிரச்சினையானது மனிதாபிமான மற்றும் ஜீவனோப பிரச்சினை எனவும் இதனை இராஜதந்திர ரீதியில் அணுக வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இன, மதவாத பிரசாரங்கள் தடை செய்யப்பட வேண்டும்

## அகில இலங்கை இந்து காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இனவாதம், மதவாதம் கண்டிக்கப்பட வேண்டியது என அகில இலங்கை இந்து காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

அது வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

சிறுபான்மை இன மற்றும் மத சமூகங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

எந்தவொரு தரப்பினரும் இன ஒடுக்கு முறைகளை மேற்கொள்ளக் கூடாது எனவும் அதற்கு அனுமதிக்கவும் முடியாது.

மத மற்றும் கலாசார தனியடையாளங்கள் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவற்றை பயன்படுத்தி ஏனைய மத சமூகங்கள் ஒடுக்கப்படக் கூடாது.

நாட்டின் அனைத்து இன மக்களும் தாங்கள் முதலாம் தர பிரஜைகள் என்பதனை உணரக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். எவரும் இரண்டாம் தரப் பிரஜைகளாக தங்களை எண்ணக்கூடிய பின்னணி உருவாக்கப்படக் கூடாது.

அரசியல் சாசனத்தின் அடிப்படையில் அனைத்து இன,மத சமூகங்களுக்கும் சுதந்திரமாக வாழக் கூடிய சந்தர்ப்பம் இருக்க வேண்டும். குறிப்பாக விரும்பிய மதத்தை வழிபாடு செய்யும் உரிமையை சுட்டிக்காட்ட வேண்டும்.

இன அல்லது மதவாத அடிப்படையிலான சகல பிரசாரங்களும் தடை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளதுடன் அனைத்து மத சமூகங்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளது. (அ)

# பாப்பரசரின் விஜயம் குறித்து விசேட செயலணி ஆராய்வு

(கொழும்பு)

பாப்பரசர் பிரான்ஸிசின் இலங்கை விஜயம் தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராயும் அமைச்சுக்களுக்கிடையிலான செயலணி நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்துள்ளது. வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கர்தினால் மல்கம் ரஞ்சித், புனித பாப்பரசரின் தூதுவர் என்குயென் வன் ரொட், மறைமாவட்ட ஆயர்களான ரேமன்ட் விக்ரமசிங்க, வலன்ஸ் மென்டிஸ், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் நந்த மல்லவாராய்ச்சி, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத், பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் ரட்ணாயக்க, கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஜயந்த கொலம்பகே, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் கே.ஏ.குணதிலக, பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன், உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

பாப்பரசரின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டிருந்தது.

வத்திக்கானிலிருந்து வரவிருக்கும் குழுவினருடன் அடுத்த சுற்றுக் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. (அ)

# நீதி அமைச்சர் ஹக்கீம் பதவி விலக வேண்டும்

## அஸ்கிரிய பீடம் கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமை பதவி விலகுமாறு பௌத்த மத பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது.

நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமின் இனவாதச் செயற்போக்கு அவரது அமைச்சர் பதவிக்கு இழுக்கானதாகும். எனவே அவர் அமைச்சர் பதவியைத்துறக்க வேண்டும். இவ்வாறு கோரியிருக்கின்றது அஸ்கிரிய பீடம்.

தங்களுக்கு மாறாகச் செயற்பட்டு வரும் மேற்குலகுக்கு எதிராக முஸ்லிம் நாடுகள் பெரும் போராட்டம் நடத்தி வரும் இந்த வேளையில் அமைச்சர் ஹக்கீம் மேற்குலகினதும் ஐ.நாவினதும் பிரதிநிதிகளுக்குப் பின்னால் போய் தவறான குற்றச்சாட்டுக்களை அடுக்கி, அதற்கு சர்வதேச கவனிப்பை வழங்கி அதன் மூலம் அத்தரப்புக்களின் இலங்கை எதிர்ப்பு போக்குக்கு ஒத்துழைத்து உதவியும் வருகிறார்.

அளுத்கமவிலும் பேருவளையிலும் அண்மையில் இடம்பெற்ற துன்பியல் சம்பவங்களை தமது சந்தர்ப்பவாத அரசியலுக்கு அவர் வசமாகப் பயன் படுத்துகின்றார் என்றும் அஸ்கிரிய பீடம் தெரிவித்துள்ளது.

ஒரு பொறுப்புள்ள அரசியல்வாதியின் போக்கில் இருந்து அவர் விலகிச் செல்கின்றார்.

மேற்குலக சக்திகளின் எதிர்பார்ப்புக்களையும் விருப்புக்களையும் திருப்திப்படுத்தும் வகையில் அவர் செயற்படுகின்றார் என்பது தெளிவு. நாட்டுக்கு அபகீர்த்தி மற்றும் அழிவை ஏற்படுத்தும் அவரது போக்கை முஸ்லிம்கள் கூட அங்கீரிக்கமாட்டார்கள்.

அவர் நெருப்புக்கு மேலும் எரியூட்டு கின்றார் என்று அஸ்கிரிய பீடத்தின் குழு உறுப்பினர் வண.மெதகம தம்மானந்த தேரர் சொன்னார். சகல சமூகத்தையும் சமமாக மதிக்க வேண்டிய ஹக்கீம் அதைவிடுத்து தனது பக்கச்சார்பான போக்கு மூலம் பிற்போக்குச் சக்திகளின் பக்கம் சாய்கின்றார் என்றும் தேரர் குற்றம் சுமத்தினார். (அ)

# 6ம் வகுப்பிலிருந்து 11ம் வகுப்புவரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான விசேட இரண்டாம் மொழி கற்கைநெறி

மொழியியல் மற்றும் கல்வியமைச்சின் ஆலோசனைக்கிணங்க பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்கள் மற்றும் கிழமை நாட்களில் மாலை நேரங்களில் ஆரம்ப சிங்களமொழி வகுப்புக்களும் ஆங்கில மொழி வகுப்புக்களும் இந்து, பௌத்த கலாசாரப் பேரவையால் யாழ்.மாவட்டத்தில் நடத்துவதற்கு பேரவையின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்ன தேரரூடாக பேரவையின் செயலாளர் தேசமானிய M.T.S. இராமச்சந்திரன் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான நிதியனுசரணையை மட்டும் தேசமானிய இராமச்சந்திரன் முழுமையாக வழங்க பெற்றோர்களும் இந்து,பௌத்த கலாசாரப் பேரவையும் மேலதிக அனுசரணை வழங்குகின்றனர்.

ஆறுமாத காலம் அல்லது 120 மணித்தியாலங்கள் கொண்ட இக் கற்கை நெறிக்கு ஆரம்பப் பகுதியான LEVEL-III பரீட்சைக்குரியதாக மொழியியல் மற்றும் கல்வியமைச்சின் ஆலோசனைக்கிணங்க பாடத்திட்டங்கள் சதகாம் செவன பௌத்த ஆராய்ச்சி நிலையத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் கீழ்க்காணும் இடங்களில் பெற்றோரின் அனுமதியுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

கற்கைநெறி முடிவில் நடைபெறும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு **DIPLOMA IN SINHALA LANGUAGE LEVEL-III** சான்றிதழ் வழங்கப்படும். ஒவ்வொரு ஆறுமாத முடிவிலும் இடைப் பரீட்சைகள் நடத்தப்படுவதுடன், க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரியதாக பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. பல நூற்றுக்கணக்கான பெற்றோர்களது வேண்டுகோளுக்கிணங்க வடமாகாணத்தின் சகல இடங்களிலும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக

**யாழ்ப்பாண அலுவலகம், கைதடி, சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்தியகல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம், நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ஆகிய இடங்களில் ஜூலை மாத ஆரம்பத்தில் வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

மேற்படி கற்கை நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் மேற் கூறப்பட்ட பாடசாலைகளில் சனி,ஞாயிறு தினங்களில் காலை 9 மணியிலிருந்து 11 மணிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். யாழ்ப்பாண அலுவலகத்தில் வாரத்தின் ஏழு நாட்களும் காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

**மேலதிக விபரங்களுக்கு**
**021 222 7542,**
**021 222 0021**


**இந்து,பௌத்த கலாசாரப் பேரவை- நிர்வாகம்.**
**29, பழம் வீதி, கந்தர் மடம்,யாழ்ப்பாணம்.**

(6949)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரணைமடு குடிநீர் விநியோகம் தொடர்பிலான கலந்துரையாடலில் தீர்வு எட்டப்படவில்லை





(கண்டாவளை)

இரணைமடு திட்டத்தை ஏற்கப் போவதில்லையென கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சில கமக்கார அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கமக்கார அமைப்புக்களுடனான கலந்துரையாடல் நிகழ்வு நேற்றைய தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற போதே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையினர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள கிளிநொச்சி மாவட்ட அரச உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்து வெளியிடுகையில்,

இரணைமடு திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதற்கு கிளிநொச்சி மக்களினால் பல்வேறு மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இதையடுத்து அமைச்சரவை கூட்டத்தின் போது இத்திட்டத்தை கைவிட்டு மாற்று வழியினூடாக யாழ்ப்பாணத்திற்கான குடிநீர் திட்டத்தை கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப் பட்டது.

இந்நிலையில் இரணைமடு திட்டத்தை கைவிடுவதற்கு முன்னர் கிளிநொச்சி மக்களோடு கலந்தாலோசிப்பதற்கு கால அவகாசம் தருமாறு கேட்டதற்கு இணங்கவே இன்று உங்களை சந்தித்துள்ளேன் என்றார்.

இதில் கலந்து கொண்ட சுமார் 120 இற்கும் மேற்பட்ட கமக்கார அமைப்பினரில் குறிப்பாக இரணைமடு குளத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களால் இரணைமடு திட்டத்தால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைக்கப்பட்டதுடன் மாறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

எனினும் பூநகரி பிரதேச கமக்கார அமைப்புக்களால் இரணைமடு திட்டம் நடைமுறைப்படுத்தப்படாது விடப்படும் பட்சத்தில் பல்வேறு கிராமங்கள் நீரின்றி போகும் சூழ்நிலை உருவாகும்.

எனவே, மாற்றுவழிமுறைகளில் பூநகரி பிரதேசத்திலுள்ள குளங்களை புனரமைத்து அவற்றினூடாக குடிநீரை விநியோகிக்குமாறு கோரிக்கை விடப்பட்டது.

இந்நிலையில் அமைச்சரினால் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா அல்லது மாற்று வழிமுறைகளை ஏற்படுத்துவதா? என்பது தொடர்பில் இன்னும் ஓரிரு வாரங்களில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (9-263)

## விழிப்புணர்வு நிகழ்வு

குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தினால் மனவடுவுக்கு உட்பட்டவர்களுக்கான சர்வதேசதின நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு ஆனையிறவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு, மரம் நடுகை என்பன நடைபெறவுள்ளதாக குடும்ப புனர் வாழ்வு நிறுவனத்தின் வடமாகாண இணைப்பதிகாரி வ.பிறேம்குமார் தெரிவித்துள்ளார். (9-254)




## மின்விநியோகம்

கிளிநொச்சி மாவட்டத்தின் முசலிப்பிட்டி, மாயவனூர் ஆகிய கிராமங்களுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தினூடாக மின் வழங்குவதற்கான மின் பிறப்பாக்கி திறப்பு விழா இன்று வியாழக்கிழமையும் கரியாலை நாகபடுவான் மின்பிறப்பாக்கி திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் வேளைகளில் நடைபெறவுள்ளது.


இம் மின்பிறப்பாக்கிகளை பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் திறந்து மக்கள் பாவனைக்கு விடவுள்ளார். (9-254)

## கருத்தரங்கு

(குருமன்காடு)

வவுனியா தெற்கு வலயத்தில் உயர் தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான கருத்தரங்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.


இதன்படி இன்று பௌதீகவியல் பாடத்திற்கான கருத்தரங்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-250)





வவுனியா புளியங்குளம் புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் பொங்கல் விழா அண்மையில் இடம்பெற்ற போது.... (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# வசதிகளின்றி இயங்கும் கிருஷ்ணபுரம் வி.கழகம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கிருஷ்ணபுரம் விளையாட்டுக் கழகம் வசதிகளின்றியுள்ளதாக விளையாட்டு வீரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கழகத்தின் சீருடைகள், வெற்றிக் கிண்ணங்கள் போன்ற பொருட்களை பாதுகாக்க அலுமாரிகள் கூட இல்லாத நிலையிலே கழகம் இயங்கி வருகின்றது.

முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு விளையாட்டுகளில் சாதனை படைப்பவர்களாக இக் கழக விளையாட்டு வீரர்களே திகழ்ந்தனர்.

எனினும் தற்போது விளையாட்டுக் கழகத்திற்கான அடிப்படை வசதிகள் எதுவும் ஏற்படுத்திக் கொடுக்காமையினால் அவர்களின் திறன்கள் மழுங்கடிக்கப்பட்டு வருவதாக வீரர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

விளையாட்டு மைதானம் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் வழங்கப்பட்டுள்ள போதும் சகலதுறை விளையாட்டுக்களையும் முன்னெடுக்கக் கூடிய வசதிகளில்லை.

எனவே, குறித்த விளையாட்டுக் கழகத்தை மேம்படுத்த அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும் என கழகத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-23)

# சுயதொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் கிளிரெக் நிறுவனத்தனூடாக மாற்றுவலுவுடையோருக்கான சுயதொழில் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் ச.மோகனபவன் தெரிவித்தார்.

இப்பயிற்சி நெறி ஜூலை மாதம் முதலாம திகதி முதல் ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை 6 மாதங்கள் நடைபெறவுள்ளது.

இதில் கைத்தொலைபேசி திருத்துதல் போன்ற நவீன பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ள நிலையில் மாற்றுத் திறனாளிகளில் 20 ஆண்களும், 20 பெண்களும் இப் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பயிற்சி நெறியில் பங்குபெறுவோருக்கு நாளாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவாக 110 ரூபாவும் பயிற்சி நிறைவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்களும், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாக பொருத்தமான சுயதொழில் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

எனவே பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் இது தொடர்பான மேலதிக தகவல்களை கிளிரெக் நிறுவனத்தில் அல்லது பிரதேச செயலகங்களிலுள்ள சமூக சேவை பிரிவுடன் அல்லது கச்சேரியிலுள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-254)

# கிளி.மாவட்டத்தில் 323 பேருக்கு வீடமைப்பு கடன் கிடைத்துள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 323 பேருக்கு வீடமைப்புக் கடன்கள் வழங்கப் பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஜனசெவன உபகார கடன் திட்டம் மற்றும் சசுனின் சேவண மானியத் திட்டம் ஆகியவற்றின் மூலம், 2011 ஆம் ஆண்டு முதல் இவ்வருடம் மே மாதம் வரையிலுமே மேற்குறித்த தொகையிலான வீடமைப்புக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.


அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களுக்காக வழங்கப்படுகின்ற இந்த வீடமைப்புக் கடனானது,

வீடுகள் திருத்துவதற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையிலும, வடுகள் அமைப்பதற்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 இலட்சதது 50 ஆயிரம் ரூபா வரையிலும் வழங்கப்படுகின்றது.

இதன்படி, கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 166 பேருக்கும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில 57 பேருக்கும் பூநகரி செயலர் பிரிவில் 55 பேருக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 45 பேருக்குமாக மொத்தம் 323 பேருக்கு வீடுத் திட்டக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்வெளியில் வைர நட்சத்திரம்



விண்வெளியில் பூமி அளவில் மிகப்பெரிய வைரத்தை அமெரிக்க வானியல் ஆய்வாளர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மிகவும் குளிர்ச்சியான மங்கலான ஒரு நட்சத்திரத்தை விஸ்கான்சின் மில்வாகி பல்கலைக் கழக பேராசிரியர் டேவிட் கப்லான் தலைமையிலான ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஏனைய நட்சத்திரங்களில் இருந்து இதன் தன்மை வேறுபட்டுள்ளது.

அதன் கார்பன் படிகமாகி அதன் விளைவாக பூமியை ஒத்த அளவில் ஒரு மிகப்பெரிய வைரமாக விண்வெளியில் மிதக்கிறது. அதன் வயது சுமார் 11 பில்லியன் ஆண்டுகள் இருக்கும் என கருதப்படுகிறது.

# கங்கை நீரில் கதிர்வீச்சு தாக்கம்

## ஐதராபாத் அணுசக்தி தேசிய மையத்தின் அதிர்ச்சித் தகவல்

(ஐதராபாத்)

இந்தியாவின் புனித நதியாகக் கருதப்படும் கங்கை நீரில் கதிர்வீச்சுத் தாக்கம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஐதராபாத்தில் உள்ள அணுசக்தி தேசிய மையத்தின் பொருட்கள் இயைபு குணநலப்படுத்துதல் மையம் கங்கை நீரின் மாதிரிகளை சோதனை செய்து பார்த்தது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற கும்பமேளாத் திருவிழாவின்போது சேகரிக்கப்பட்ட நீரின் மாதிரிகளே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அப்போது அதில் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய கதிர்வீச்சு தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டது.

கங்கை நதியை சுத்தப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கவிருப்பதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தான் பதவியேற்றபின் தெரிவித்திருந்தார்.

ஆயினும், இதில் எதிர்பார்க்கப்படுவதைவிட அதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே உண்மை நிலவரமாகும்.



பக்தர்கள் பூஜைக்காக சேகரித்த தண்ணீரில் குரோமியம்-6 கலந்திருந்ததாக சோதனை மையத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது.

குரோமியம் அத்தியாவசியமானது மட்டுமல்லாமல் நச்சுத்தன்மையும் கொண்டதாகும்.

நச்சுத்தன்மை நிறைந்த குரோமிய வகை இந்தத் தண்ணீரில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு மேல் 50 மடங்கு அதிகமாக இருந்தது என்று என்.சி.சி.எம். தலைவரான டாக்டர் சுனில் ஜெய்குமார் தெரிவித்துள்ளார்.

அதிகரித்த அளவில் காணப்படும் இந்த நச்சுத்தன்மையானது புற்றுநோய் உட்பட பல உடல்நலக் கோளாறுகளை ஏற்படுத்தக்கூடிய தன்மை கொண்டது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கங்கையில் சேரும் இந்த அசுத்தங்கள் கான்பூரில் செயற்படும் தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளின் மூலமாகவே கலப்பதாகக் கூறப்படுகின்றது.

எனவே இத்தகைய அசுத்தங்களையும் நீக்கக்கூடிய அளவில் சுத்திகரிப்பு தொழில்நுட்பம் கங்கையில் பயன்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் கூறினார்.

## அமெரிக்காவுக்கு பெண் ஜனாதிபதி

அமெரிக்காவின் ஜனாதிபதியாக, பெண் ஒருவரை தேர்ந்தெடுக்கும் நேரம் வந்துவிட்டதாக மிச்சேல் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனதிபதி தேர்தல் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு நடக்கவுள்ள நிலையில், இந்தத் தேர்தலில் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன், ஜனநாயக கட்சியின் சார்பாக போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்சேல் ஒபாமா, நாட்டின் மிக உயரிய பொறுப்புக்கு பெண் ஒருவர் நியமனமாக வேண்டிய தருணம் வந்துவிட்டது.

யாராக இருந்தாலும், போட்டியிடுபவர் திறமை வாய்ந்தவர்களாக இருந்தால், அவரை மக்கள் ஏற்கத் தயாராக உள்ளனர்.

அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை என நான் நினைக்கிறேன் என்று மிச்சேல் ஒபாமா, ஹிலாரி கிளின்டனின் பெயரை குறிப்பிடாமல் பேசினார்.

# புகையிரதம் தடம்புரண்டு விபத்து; நால்வர் பலி; 11 பேர் படுகாயம்



(பாட்னா)

வடஇந்தியாவின் டில்லி-திப்ரூகர் செல்லும் ராஜ்தானி அதிவேக புகையிரதம் பீகார் அருகே தடம் புரண்ட விபத்தில் 4 பேர் பலியாகினர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் பீகார் மாநிலம் சாப்ரா மாவட்டம் கோல்டன்கார்க் வந்த போது புகையிரதம் திடீரென தடம் புரண்டது.

இதில் புகையிரதத்தின் 11 பெட்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகி விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் 5 பேர் பலியானதாகவும் மேலும் 11 பேர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த மீட்பு குழுவினர் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு ரயில்வே அமைச்சர் சதானந்த கவுடா ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும் நிவாரண நிதியாக தலா 2 இலட்சம் ரூபாயும் காயம் அடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் சிறிய அளவில் காயம் ஏற்பட்டவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

மேலும் பீகார் மாநிலம் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்பதால் இது அவர்களின் சதி வேலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

## எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை கைப்பற்ற போராளிகள் மீது ஈராக் குண்டுவீச்சு

(பக்தாத்)

ஈராக்கில் எண்ணை சுத்திகரிப்பு ஆலையை கைப்பற்ற போராளிகள் மீது இராணுவம் குண்டு வீசியதில் 32 பேர் பலியாகினர்.

ஈராக்கில் ஷியா பிரிவு அரசுக்கு எதிராக சன்னி பிரிவை சேர்ந்த 'ஐ.எஸ்.ஐ.எஸ்' போராளிகள் உள்நாட்டு போரில் ஈடுபட்டுள்ளனர்.

ஈராக்கின் மிகப்பெரிய எண்ணை சுத்திகரிப்பு ஆலை பாய்ஜி நகரில் உள்ளது. அதுவும் போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, அவற்றை மீட்க போராளிகளுடன் இராணுவம் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளது.

இத்தாக்குதலின் போது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் பதுங்கியிருக்கும் போராளிகள் மீது ஈராக போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் 32 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயம் அடைந்தனர்.

ஆனால் இவர்கள் அனைவரும் பொது மக்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் 19 போராளிகள் கொல்லப்பட்டதாக இராக்கியா டி.வி. செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அன்பார் மாகாணத்தில் ஹுசேய்பா பகுதியில் நடத்தப்பட்ட குண்டுவீச்சில் 7 போராளிகளும், 6 பொது மக்களும் பலியானதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே ரமாடி அருகே போராளிகள் பிடியில் இருந்த ஹாதியா நகரை இராணுவம் மீண்டும் கைப்பற்றியுள்ளது.

ஆனால் அங்குள்ள அணை மீது போராளிகள் தாக்குதல் நடத்தினர். நீர்மின் நிலையத்தை தகர்த்து வெள்ள சேதமும் ஏற்படுத்தினர்.

பாய்ஜி நகருக்கு அருகே மேலும் ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை உள்ளது. அதையும் போராளிகள் கைப்பற்றி இருந்தனர். அதை கடும் சண்டைக்கு பின் இராணுவம் கைப்பற்றியது.

## உக்ரைனில் இராணுவ ஹெலிகொப்டர் சுடப்பட்டதில் 9 வீரர்கள் மாண்டனர்



(கீவ்)

உக்ரைன் உள்நாட்டு போரில் இராணுவ ஹெலிகொப்டரை போராட்டக்காரர்கள் சுட்டு வீழ்த்தினர். அதில் 9 இராணுவ வீரர்கள் பலியாகினர்.

ரஷ்யா அருகேயுள்ள உக்ரைனில் உள்நாட்டு போர் தீவிரம் அடைந்துள்ளது.


கிழக்கு உக்ரைனில் உள்ள ரஷ்ய ஆதரவாளர்கள் தங்களது பகுதிக்கு தன்னாட்சி உரிமை கோரி போராடி வருகின்றனர். அவர்களை ஒடுக்க இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் இரு தரப்பினருக்கும் இடையே தொடர்ந்து கடும் சண்டை நீடித்து வருகிறது. இதற்கிடையே போராட்டக்காரர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க ஜனாதிபதி பெட்ரோ போரோ ஷென்கோ வருகிற 27 ஆம் திகதிவரை போர் நிறுத்தம் அறிவித்துள்ளார்.

ஆனால் அதை போராட்டக்காரர்கள் பொருட்படுத்தவில்லை.

கிழக்கு உக்ரைனில் அவர்கள் கைப்பற்றியுள்ள ஸ்லோவியான்ஸ்க் புறநகரில் எம்.ஐ.8 ரக இராணுவ ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தினர்.

இந்த விமானத்தில் இருந்த 9 இராணுவ வீரர்கள் அனைவரும் பலியானதாக அறிவிக்கப்பட்டது.



வடக்கு அயர்லாந்து வந்த பிரிட்டன் ராணி இரண்டாம் எலிசபெத்தை, பால்பெஸ்ட்டில் அமைச்சர்கள் இருவர் வரவேற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடல் துடிக்கையில் யார் முகத்தில் பொங்கி வரும் சிரிப்பு? இது கீழ்ப் புறத்தில் இனிப்பு; மேல் புறத்தில் கசப்பு. பட்டனத்தார் கையில் உள்ள கரும்பு.
~ சினிமாப் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வெளியில் காட்ட விரும்பாத உள்ளகப் பெருங்கவலை

இராமருக்கு பட்டாபிஷேகம் நடத்தப்படுவதை கைகேயி எதிர்க்கின்றாள். தனது மகன் பரதனே நாடாள வேண்டும் என்றும் பதினான்கு ஆண்டுகள் இராமர் காடாள வேண்டும் என்றும் கைகேயி தசரதனிடம் கேட்கும் போதே தசரதன் தன்னளவில் இறந்து விட்டான். தன் மகன் காடு சென்றுவிட்டான் என்ற செய்தி தசரதனின் உடலில் இருந்து உயிரை வெளியேற்றுகிறது.

உயிர் பிரிதல் என்பதை விட, உயிரோடு இறந்து போகும் அளவில் ஏற்படுகின்ற துன்பம் இருக்கிறதே அது மகா கொடுமை.

என்ன செய்வது? அப்படியானதொரு கொடுமையை தசரதச் சக்கரவர்த்தி அனுபவித்தார்.

தன் மூத்த மகன் இராமருக்குப் பட்டாபிஷேக ஏற்பாடுகள் அனைத்து நிறைவடைந்து விட்ட நிலையில், ஒரு பெரும் ஆட்சிப் பொறுப்பை தன் தவப்புதல்வன் இராமனிடம் ஒப்படைப்பதை நினைத்து அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

எனினும் அந்த ஆனந்தம் சில நாட்களுக்குக் கூட நீடிக்கவில்லை. இராமனின் பட்டாபிஷேகத்தை நிறுத்து; பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்; இராமனைக் காட்டுக்கு அனுப்பு என்ற கோரிக்கைகள் தசரதனைச் சின்னாபின்னமாக்கின.

ஆகும் காலத்தே அவை அவை ஆகும். போகும் காலத்தே பொன், பொருள், புகழ் அனைத்தும் போகும் என்பது போல தசரதனின் காலம் பிழைக்க; அவன், புத்திர சோகத்தால் உயிரிழந்து போகிறான்.

ஒரு பெரும் மன்னனுக்கு ஏன் இந்த நிலைமை என்று ஆராய்வதுதான் இக் காப்பியத்தைப் படிப்பவர்களின் கடமையாக இருக்கும். இங்குதான் ஓர் உண்மை தெரிய வருகிறது.

கண் தெரியாத முனிபுங்கவரின் ஒரே மகனை வில் அடித்து மரணிக்கச் செய்த பாவமே தசரதனுக்கு இக்கதி ஏற்படக் காரணமாயிற்று. ஒரு சிறுவன் தண்ணீர் எடுக்கின்றான் என்று அறியாமல் மான் தண்ணீர் குடிப்பதாகக் கருதி அம்பெய்ய அந்த மாணிடச் சிறுவன் மரணிக்க நேரிடுகிறது.

தெரியாமல் செய்த பாவத்திற்கு இத்துணை தண்டனையா? என்றால் அதுதான் இல்லை. மாறாக மன்னன் தசரதன் மானைக் கொல்லும் நோக்கில் அம்பெய்தானே! அது பாவச் செயல் அல்லவா?

தன் உயிர் போல் மன்னுயிரை நேசிக்க வேண்டிய மன்னன், வேட்டையாடுதல் என்ற பெயரில் மானை–மரையை கொல்வது முறையா? அதிலும் தண்ணீர் குடிக்க வந்த மானைக் கொல்ல நினைத்து கொன்றதற்கு சமனல்லவா?

ஆக, வேட்டையாடி ஜீவராசிகளைக் கொன்றொழித்த பாவச் செயலே முனிபுங்கவரின் புதல்வன் வழியாக தசரதனைத் தீண்டுகின்றது என்ற முடிவுக்கு நாம் வருதலில் எந்தத் தவறுமில்லை.

தெரியாமல் செய்த பாவத்திற்கும் தெரிந்து செய்த மிருக பலிக்குமாக தசரதச் சக்கரவர்த்தி புத்திர சோகத்தால் இவ் பூவுலகு விட்டேகினான் என்றால், மன்னர்கள் மன்னுயிரைப் பேணுவதில் எத்துணை கவனமாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

இப்போதெல்லாம் கைகேயிகள் இல்லை என்று யாரும் திமிர் கொள்ளலாகாது. செய்த பாவபழி ஊழ்வினைகள் ஐ.நா சபை, அமெரிக்கா என்பவற்றின் ஊடாக வந்துறுத்தும் என்பதை எவரும் மறவற்க.

வெளியக விசாரணைகள் வலுப்பெற, உள்ளகப் பயமும் வெளியகக் கோபமும் ஏற்படும். இது நிலைமையை மேன்மேலும் மோசமாக்கும் என்பது கவனத்திற்குரியது.

# ஆசிரிய சேவையின் 3-I ஆம் தரத்திற்கு நியமிக்கப்படவுள்ளோரின் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 190 தேசிய போதனாக் கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப் படவுள்ளது.

மேற்படி நியமனத்திற்காக நியமிக்கப்படவிருக்கும் தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களில் யாழ்.மாவடத்தைச்சேர்ந்த டிப்ளோ மாதிரிகளுக்கு பாடசாலை தெரிவினை மேற்கொள்வதற்காக நேர்முகத்தேர்வு நாளை வெள்ளிக்கிழமையும் ஏனைய வெளி மாவட்ட டிப்ளோ மாதாரிகளுக்கு எதிர் வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமையும் முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை செம்மணி வீதி, நலலூரில் அமைந்துள்ள வட மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நேர்முகத்தேர்வில் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றின்மூலப்பிரதி மற்றும் போட்டோ பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு வட மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கேட்டுள்ளார்.

அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு:-

எஸ்.டிலோஜி தெல்லிப்பளை, வீ.யலஜா மல்லாகம், கே.சிந்துஜா பண்டத்தரிப்பு ஏ.பகீர்தா நீர்வேலி, பி.போஜினி இணுவில், கே.டுஸ்யந்தி அளவெட்டி. ஆர்.ஐஸ்வர்யா அல்வாய், கே.ஞானசௌந்தரி வட்டுக்கோட்டை, வீ.தர்மதா ஆறுமுகம் கல்வியன்காடு, பீ.தீபா நீர்வேலி, எஸ்.நித்யா நாகர்கோவில் தெற்கு நாகர்கோவில் பி.யாழினி பருத்தித்துறை,

ரீ.ஜெஞ்சிகா வரணி. ஏ.வர்ணாம்பாள் பொலிகண்டி, பி.கருணைரூபி கெற்பேலி, பீ.சுகிர்தா சுழிபுரம், வீ.பிரம்மியா நாச்சிமார் கோவிலடி, கே.ஸ்மலா, செங்கலடி. என்.தனஞ்செனி நீர்வேலி, எம்.தர்சிகா மட்டுவில்தெற்கு, எஸ்.மேகலா ஊரெழு கிழக்கு, வை.கார்த்திகா நுணுவில், எஸ்.தாட்சாயினி கச்சாய் தெற்கு, எம்.மயூரதி அச்செழு வடக்கு,ஆர்.ரஞ்சிதா புத்தூர் கிழக்கு,என். நிசாந்தி இணுவில் மேற்கு, எஸ்.கோகுலவாணி காரைநகர், கே.சிந்துயா,சுன்னாகம் கிழக்கு, ரீ.வினோதா யாழ்ப்பாணம்,

ஆர்.தர்சன் வட்டு தென்மேற்கு, ரீ.கஜநதிரராஜா பிரமந்தனாறு, ரீ.ரினிதா துன்னாலை வடக்கு, எஸ். அன்னதாரகை,புன்னைநீராவி, சி.கிரிஷாந்தினி கைதடி தெற்கு, கே.அகிலன் அம்பாள் நகர், என். ரஞ்சித் கணணா திருநெல்வேலி, வீ. சாதனா வவுனியா, வீ.நித்தியா நீர்வேலி மேற்கு.

ஜே.சரண்யா பண்ணாலை ஜி.நிஷாலினிநெல்லியடி, எஸ்.டினோஜா ஊரெழு மேற்கு, எஸ். ஆரணி அல்வாய் வட மேற்கு, எஸ்.வானதி சங்குவேலி,

பீ.நிரோஜா பருத்தித்துறை. வீ.விஜிநதினி துன்னாலை, கே.அகிலா மட்டக்களப்பு, என்.கலைச் செல்வன் தவசிகுளம்,எம்.கஸ்தூரி இராமநாதபுரம்,ரீ.குமணன் சுன்னாகம், ஆர்.சரண்யா செல்வாநகர், பீ.விஜிதா செறின் மன்னார், பீ.பாலச்சந்திரன் கல்மடு, எஸ்.நிசாந்தன் செம்பியன் பற்று தெற்கு,

ஏ.தற்பரா பரந்தன், கே.துவார கன் ஆவரங்கால் கிழக்கு, ஆர். நித் தியா தும்பளை, ரீ.கீதாகரன் யாழ்ப்பாணம், எஸ்.விமல் கைதடி தெற்கு, யு.அஜந்தன் நாயன்மார்கட்டு, வீ. லாவண்யா இடைக்காடு, எஸ்.சுசிதா கெற்பேலி மத்தி, பி.பிரியா சிவனடியார் வளவு, இமையாணன்மேற்கு, எஸ் சிவனுஜா நீராவியடி,பீ.இந்திரஜித் முட மாவடி, ரீ.மேனன் 61, மாட்டின் றோட், பீ.சுரேகா மாலுசந்தி, எஸ்.தர்ச்ஷனா தாவடி வடக்கு பி.ஜெகாம்பிகா, யாழ்ப் பாணம், பி.ஜர்சிதா அன்னக்கோட்டை, வீ.லோஜாவனி சுழிபுரம், ரீ.திவ்யா சுழிபுரம், ரீ.ஜத்திகா சுதுமலை மானிப்பாய், எஸ்.எம். நில்பான் வேப்பங்குளம், ரீ.ஞானதர்சினி கொக்குவில் மேற்கு, எஸ்.சிந்துயா அல்வாய் கிழக்கு,

கே.ராசதீபன் நவக்கிரி, பீ.அமலகாந் இருபாலை கிழக்கு, வை.கமல்ராஜ் மல்லாகம், ஆர். ஜயபாலினி கொக்குவில் கிழக்கு, ரீ.ஜசோதா கெருடாவில், எம்.துசிர்தன் குப்பிளான் தெற்கு.என்.சாலினி வரணி, பீ.நிரஞ்சன் சுன்னாகம், ஜீ.துசாந்தி சாவகச்சேரி, யு.நிஷாந்தன் வல்வெட்டித்துறை,

எஸ்.மயூரதன் கொக்குவில் மேற்கு, ரி.பிரகாசநிருபன் நுணாவில் சந்தி, எம்.மயூரன் அராலி வடக்கு, ஆர்.நிரூஜன் கொக்குவில் மேற்கு, ரி. சஜீபன் ஏழாலை மேற்கு, எஸ்.வனஜா வளலாய் மேற்கு, ஜனிதா கொக்குவில்மேற்கு, எஸ். கீர்த்திகா சுன்னாகம் மேற்கு,

பிரதீபன் அளவெட்டி, எம்.றொபேட் ஜோன்சன் ஓமந்தை, ஏ.ஆர்.அனோஜன் ஊர்காவற்துறை. எஸ்.பிரதீபா செம்பியன பற்று தெற்கு, எஸ்.நளினி துன்னாலை வடக்கு, எஸ்.தர்சிகா கைதடி மேற்கு, கே. சுகன்யா வட்டு தென்மேற்கு, என். மிதிலா வட்டு கிழக்கு, பி.சுரேன் புத்தூர், எஸ்.திவ்யா சுழிபுரம் மத்தி, ஆர்.கோசிகா பத்தமேனி, எஸ்.ரூபிகா துணவி, பி.பி.ரி.மெல்கா ட்லீமா பேசாலை,

ஆர்.கபிலதாஸ் சாவகச்சேரி கிழக்கு, ரி.உகேந்திரா கட்டபறாய், எஸ்.கோகுலன், பூநகரி, எஸ்.கமலவாஜினி காரைநகர், ரி.மதன்ராஜ் தம்பாலை, ஆர்.செந்தூரன் அச்சுவேலி மேற்கு. ஜே.நிரோசன் குரு நகர், எஸ்.லலிதா அராலி மத்தி, ஜே.சிவனுஜா யாழ்ப்பாணம், என்.கஜனி தெல்லிப்பளை கிழக்கு, கே.மதுஷா நல்லூர், ஜி.யோகநிருபன் கோப்பாய் தெற்கு,

எஸ்.உஷாஜினி ஜயந்திநகர், யூ.லக்ஷனா அளவெட்டி வடக்கு, பி.சிவபாதம் அல்லாரை தெற்கு,ஏ.கேதீஸ்வரி வட்டு கிழக்கு, ஏ.ஜோன் நிக்லஸ் நேரியகுளம், ரி.தனுஸ்வரன் யாழ்ப்பாணம். வி.ஜெனனி உடுவில் வடக்கு, ஜே.அபிராம் அடம்பன். வி.அனுரன் தெல்லிப்பளை கிழக்கு, ஜே.ஜனார்த்தனி புளியங்கூடல் வடக்கு, ரி.ஜசிந்தன் ஆனந்தபுரம், எம்.எச்.பௌமியா மகாறம்பைக்குளம், ஏ.எம்.ஏ.கபீர் மன்னார்.என்.பகீரதன் மகாறம்பைக் குளம்,எஸ்.றெஜிஸ்குமார் மன்னார். கே.மதனிகா குமுழமுனை, கே.மேகலா வேலணை மேற்கு, கே.திவ்யா காரை நகர், ரி.பவித்திரா வண்ணார்பண்ணை, எஸ்.ரேகா வவுனியா, பி.யுகந்தினி அளவெட்டி வடக்கு, வீ.சுதர்சினி உடுவில் வடக்கு, ரி.மைதிலி நீர்வேலி வடக்கு, ஆர்.அபிராமி நல்லூர், எஸ்.தாரணி இணுவில் கிழக்கு, எஸ்.மதுராஜினி வட்டு கிழக்கு,


எஸ்.பாலமுருகன் வட்டுதென்மேற்கு, ஜி. நளினி செட்டிக்குளம், எஸ்.கஸ்தூரி புலோப்பளை கிழக்கு, கே.நிரோஜா கல்வயல், என்.பாசினி கோப்பாய் வடக்கு, கே.கௌசிகா கைதடி மத்தி, ஏ.நிரோசன் பருத்தித்துறை.வீ.ரம்மிகா நீர்வேலி மத்தி, என்.விஜிதரன் மந்துவில், எஸ்.தனுசியா துன்னாலை, எஸ்.ஜெசீதா உடுத்துறை வடக்கு, கே.தர்சிகா சமரபாகு,

எல்.சந்திரகாசன் மானிப்பாய், எஸ்.டனிசினி சுளிபுரம் கிழக்கு, வீ.அனோஜன் வற்றாப்பளை, எஸ்.அருட்சுதன் வேலணை மேற்கு, பீ.மிதிலா அல்வாய் வடக்கு, பீ.பிரியதர்சினி வவுனியா, ரீ.பிருந்தா தொண்டைமானாறு, வீ.வினிஸ் கன்ஷியா சாவகச்சேரி, ரீ.மிதுலா துன்னாலை மேற்கு, எம்.பிரதீபா நீர்வேலி வடக்கு,

எஸ்.சுதாகரன் குப்பிளான் வடக்கு, ஆர்.கஜேந்திரன் வவுனியா, எஸ்.வித்தியா இளவாலை,கே.சோபியா புலோலி மத்தி, எம்.கமலதாஸ் பன்னாலை, கே.சயந்தி மகாறம்பைக்குளம், எஸ். தமிழ் விழி துர்க்காபுரம்,எஸ். கௌதமி புத்தூர் வடக்கு, வண.அ.சகோ.அ.பிரியதர்சினி குரூஸ் பெரிய குஞ்சுக்குளம், ரீ.ஜெரூசா சுன்னாகம், அ.சகோ.பி.மேரிஒஸ்கா லெம்பேட் இலுப்பைக்குளம்,எஸ்.சுதர்சன் பண்டத்தரிப்பு, எம்.தவரஞ்சினி நெடுந்தீவு,


அ.சகோ.மேரி றோசி யாழ்ப்பாணம், அ.சகோ. எவ்.பிரபாஜினி வவுனியா சி.றதீபன் ஒட்டுசுட்டான், கே.கிரிதரன் சரவணை மேற்கு, என்.எஸ். என்.மிரண்டா பேசாலை, வி.நிசாந்தினி வேலணை மேற்கு, ஏ.மேளின் டனுஷா குரூஸ் தாழ்வுபாடு, எம்.ஏ.நசீஹா அடம்பன், ஜீ.யாழினி அல்வாய் கிழக்கு, என்.எம்.சோமவீர வவுனியா. (அ)

# சத்திய தரிசனம்



பணம் உங்கள் பிரச்சினையைத் தீர்க்காது. இதயத்தைக் கொண்டு தான் உன் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளமுடியும். பணத்தாலல்ல. எத்தனை கொடுமையான செயல்கள் புரிய நேர்ந்தாலும் இறைவனைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய். மலைச்சிகரங்களின் மேல் எவ்வளவு பனி இருந்தாலும் சூரிய வெப்பத்தில் அது கரைந்து விடும். பாவங்கள் மலைபோல் குவிந்தாலும் இறைவனருளால் அவை கரைந்து விடும்.

எவ்வாறு உம்மால் அமைதி பெற முடியும்? பஜனை முடிந்த பின்பு சிறிது நேரம் தியானம் செய்கிறோம். பிறகு சாந்தி, சாந்தி என்று மூன்று தடவைகள் கூறுகிறோம். சாந்தி அமைதியைக் குறிப்பது. அதை நிதானமாக சா...ந்...தி என்றவாறு உச்சரிக்கவேண்டும். அதையே உத்வேகத்துடன் படபடப்புடன் உச்சரிக்கின்றீர்கள். உச்சரிப்பிலேயே அமைதி இல்லை என்றால் அமைதி எவ்வாறு கிட்டும்?



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## வியாதிக்கு மனமே காரணம்

பல நோய்களுக்கு நமது மனமே காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கனடாவில் ஹான்ஸ் ஸெல்யீ என்ற மருத்துவர் The Stress of Life என்ற தன்னுடைய நூலின் மன இறுக்கம் (Hypertension), குடற்புண் (Peptic Ulcer) போன்ற வியாதிகளுக்கு அடிப்படைக்கார ணம் மன அழுத்தம் தான் என்று கண்டுபிடித்து எழுதியுள்ளார்.

மனஅழுத்தம் ஏற்பட்டதும் அது பெருமூளைப் பகுதியைத் தாக்குகிறது. அனிச்சை நரம்பு மண்டலத்தை இந்தப் பகுதிதான் கட்டுப்படுத்தப்படுகிறது. இப்பகுதி தாக்கப்பட்டதும் பிட்யூட்டரி போன்ற பல்வேறு சுரப்பிகள் சுரக்கின்றன. இப்படிப் பல்வேறு மாற்றங்களின் விளைவாக இரத்தத்திற் சர்க்கரையின் அளவு அதிகரிக்கிறது. இரத்த அழுத்தம் போன்ற பலவித வியாதிகள் உண்டாகின்றன.

ஒரு மனிதன் மனநிலையில் எவ்வித சுமையும் இல்லையென்றால் அவன் உடல்நலம் ஆரோக்கியமாக இருக்கும். எனவே தவறான உணர்ச்சிகளில் மன அழுத்தம் ஏற்படுவதால் அவற்றை நாம் தவிர்க்கவேண்டும். நம் உடலைக் காக்கவேண்டும். எது நடந்தாலும் மனம் கலங்கக் கூடாது. குழம்பக் கூடாது, அச்சப்படக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் சம்பியன்களின் விறுவிறுப்பான போட்டியில் லாவகமாக இத்தாலியை வெளியேற்றியது உருகுவே




உலக கோப்பை காற்பந்து போட்டியில் நேற்றைய ஆட்டத்தில் இத்தாலி மற்றும் உருகுவே அணிகள் மோதின.

ஆட்டத்தின் 2 ஆவது நிமிடத்தில் உருகுவேவின் கேசரஸ் அடித்த பந்தை இத்தாலியின் பபோன் லாவகமாக தடுத்தார்.

மீண்டும் ஆட்டத்தின் 21 ஆவது நிமிடத்தில் உருகுவே வின் சுவாரெஸ் அடித்த பந்தை இத்தாலியின் போனுக்கி அழகாக தடுத்தார். ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் உருகுவே வீரரின் தலைக்கு பாய்ந்து பந்தை அடிக்க முயன்ற பலடோலிக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

முதல் பாதி ஆட்டம் முடிவடைந்த போது இரு அணிகளும் ஒரு கோல் கூட அடிக்காமல் இருந்தன.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது முதல் உருகுவே அணி ஆக்ரோஷமாக ஆடியது. ஆட்டத்தின் 46 ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் ரியோசுக்கு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டது.

ஆட்டத்தின் 59 ஆவது நிமிடத்தில் இத்தாலியின் மார்ச்சிஸியோ ரெட் கார்டு காண்பிக்கப்பட்டு போட்டியிலிருந்து வெளியேறினார்.

ஆட்டத்தின் 81 ஆவது நிமிடத்தில் உருகுவே வீரர் கோடின் அற்புதமான கோல் ஒன்றை அடித்து அந்த அணியின் கோல் கணக்கை ஆரம்பித்தார். 90 ஆவது நிமிடம் வரை மேற்கொண்டு கோல் எதுவும் போடாததால் கூடுதலாக ஐந்து நிமிட நேரம் ஒதுக்கப்பட்டது.

அதிலும் இரு அணி வீரர்களும். எந்த கோலும் அடிக்காததால் 0:1 என்ற கோல் கணக்கில் இத்தாலியை வீழ்த்தி உருகுவே அணி வெற்றி பெற்றது. (க)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் தும்பளை கருணை உள்ளம். விண்மீன் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் வல்வை ரெயின்போ மைதானத்தில் நடைபெற்றுவருகின்றன.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடுமீன் B விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கலைமகள் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதன் பின்னர் பிற்பகல் 4.30 மணிக்கு மைக்கல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாடுமீன் A விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)



வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஹென்றீசியன் பிறிமியர் லீக் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெறவுள்ள முதலாவது போட்டியில் சென்.தோமஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அடுத்து பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெறவுள்ள இரண்டாவது போட்டியில் திருமகள் அராலி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காந்திஜி விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

அதனை தொடர்ந்து இரவு 7 மணியளவில் இடம்பெறவுள்ள மூன்றாவது போட்டியில் சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி கொக்குவில் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது.

இறுதியில் இரவு 8 மணியளவில் இடம்பெறவுள்ள நான்காவது போட்டியில் டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் களமிறங்கவுள்ளது. (க)

## கொலம்பியாவின் கோல் மழையில் சுருண்டு வெளியேறியது ஜப்பான்



உலக கோப்பை காற்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் கொலம்பியா மற்றும் ஜப்பான் அணிகள் மோதின.

ஏற்கனவே அடுத்த சுற்றுக்கு முன்னேறிய கொலம்பிய அணி. எந்த நெருக்கடியும் இல்லாமல் களமிறங்கியது.

போட்டியின் முதல் பாதியின் 17 ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பில் கொலம்பியாவின் கியூடார்டோ முதல் கோல் அடித்தார். இதற்கு ஜப்பான் வீரர் ஒகாசாகி 47 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுக்க. முதல் பாதி 1:1 என சமநிலை வகித்தது.


பின் விறுவிறுப்பாக துவங்கிய இரண்டாவது பாதியில் ஆதிக்கத்தை தொடர்ந்த கொலம்பியா அணிக்கு ஜாக்சன் 55. 82 ஆவது நிமிடங்களில் இரட்டை அடி கொடுத்தார். தொடர்ந்து அசத்திய கொலம்பிய அணிக்கு கடைசி நேரத்தில் ஜேம்ஸ் மற்றொரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

கடைசிவரை போராடிய ஜப்பான் வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. இறுதியில் கொலம்பியா அணி. 4:1 என ஜப்பான் அணியை வீழ்த்தியது.

இந்த வெற்றியின் மூலம் பங்கேற்ற மூன்று லீக் போட்டியிலும் வெற்றி பெற்ற கொலம்பியா அணி. 'ஹட்ரிக்' வெற்றியை பதிவு செய்து 9 புள்ளிகளுடன் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது. (க)

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய 7 ஆவது வடமாகாண விளையாட்டுப் போட்டி அணைமையில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமானது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா. அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன். வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் எஸ்.தவராசா மாகாணசபையின் ஆளும்கட்சி உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம். பா.கஜதீபன். அ.பரஞ்சோதி உள்ளிட்டவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்துக்கு எதிரான தொடரை வென்று வரலாற்று சாதனையை பதிவு செய்தது இலங்கை




இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 100 ஓட்டங்களினால் வெற்றி பெற்று தொடரை 1:0 என்ற ரீதியில் கைப்பற்றியது. போட்டியை சமப்படுத்த இங்கிலாந்து அணி போராடிய போதும் முடியாமல் போனது. போட்டி நிறைவுக்கு வர ஒரு பந்து மாத்திரம் மீதமிருந்த வேளையில், இங்கிலாந்து அணி இரண்டாவது இனனிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்தது.

போட்டியின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் 5 விக்கெட் இழப்பிற்கு 57 ஓட்டங்கள் என்ற நிலையில் தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 89.5 ஓவர்களை எதிர்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மொய்ன் அலி ஆட்டமிழக்காமல் 108 ஓட்டங்களையும், ஜோ ரூட் 31 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் பந்துவீச்சில் தம்மிக்க பிரசாத் 5 விக்கெட்களையும், ரங்கன ஹேரத் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக இலங்கை அணி தமது இரண்டாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 457 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஞ்சலோ மத்தியூஸ் டெஸ்ட் போட்டியில் பெற்ற சிறந்த ஓட்ட பெறுதியான 160 ஓட்டங்களையும், மஹேல ஜெயவர்த்தன 79 ஓட்டங்களையும், குமார் சங்ககார 55 ஓட்டங்களையும் பெற்றனர். ரங்கன ஹேரத் 48 ஓட்டங்களைப் பெற்ற அதேவேளை மத்தியூஸ் உடன் இணைந்து 9-வது விக்கெட் இணைப்பாட்டமாக 149 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டார்.

**"இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 100 ஓட்டங்களால் வெற்றி பெற்று வரலாற்று சாதனை படைத்துள்ளது.**

**இதுவரை இங்கிலாந்து மண்ணில் டெஸ்ட் தொடர் வெற்றி ஒன்றினை பதிவு செய்யாத இலங்கை நேற்றுமுன்தினம் சாதனையை பதிவு செய்துள்ளது"**

பந்துவீச்சில் லியாம் பிளாங்கட் 4 விக்கெட்களையும், ஜேம்ஸ் அன்டர்சன் 3 விக்கெட்களையும், மொய்ன் அலி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்து 257 ஓட்டங்களைப் பெற்றது. இதில் குமார் சங்கக்கார 79 ஓட்டங்களையும், தினேஷ் சந்திமால் 45 ஓட்டங்களையும் பெற்றனர். இங்கிலாந்து அணியின் பந்துவீச்சில் லியாம் பிளாங்கெட் 5 விக்கெட்களையும், ஸ்டுவோர்ட் ப்ரோட் 3 விக்கெட்களையும், ஜேம்ஸ் அன்டர்சன் இரண்டு விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணி தமது முதல் இன்னிங்சில் சகல விக்கெட்களையும் இழந்து 365 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சாம் ரொப்சன் 127 ஓட்டங்களையும், கரி பலன்ஸ் 74 ஓட்டங்களையும், இயன் பெல் 67 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சமிண்ட எரங்க, அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் தலா 4 விக்கெட்களைக் கைப்பற்றினர். ஒன்றிற்கு மேறபட்ட போட்டிகள் அடங்கிய டெஸ்ட் தொடர் ஒன்றை இலங்கை அணி இங்கிலாந்தில் வைத்து வெற்றி பெற்றுள்ளமை இதுவே முதற் தடவையாகும். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக அஞ்சலோ மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டார். இலங்கை அணியின் தொடர் நாயகனாக அஞ்சலோ மத்தியூசும், இங்கிலாந்து அணியின் தொடர் நாயகனாக ஜேம்ஸ் அன்டர்சனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

# உலகக் கிண்ண கால்பந்தாட்டம் அடுத்த சுற்றுக்கு அர்ஜெண்டினா, நைஜீரியா




பிரேசிலில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்து போட்டியில் நேற்று இடம்பெற்ற முதல் இரண்டு ஆட்டங்களில் அர்ஜெண்டினா அணியும், போஸ்னியா ஹெறர்சகோ வினா அணியும் வெற்றி பெற்றுள்ளன.

அர்ஜெண்டினா அணி நைஜீரியவை 3:2 எனும் கணக்கில் வென்றது. எனினும் நைஜீரியாவும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

போஸ்னியா ஹெர்சகோவினா, இரானை 3-1 எனும் கோல் கணக்கில் வென்றிருந்தாலும், அடுத்த சுற்றுக்கு முன்னேற முடியாது.

இந்தப் போட்டிகள் 'எப்' பிரிவில் நடைபெற்றன. இந்தப் பிரிவில் முதல் இரண்டு இடங்களை அர்ஜெண்டினாவும், நைஜீரியாவும் பெற்றுள்ளன.

அர்ஜெண்டினா இதுவரை ஆடியுள்ள மூன்று போட்டிகளிலும் வென்றதன் மூலம் 9 புள்ளிகளுடன் முதலிடத்திலுள்ளது.

நைஜீரிய அணி ஒரு வெற்றி, ஒரு தோல்வி ஆகியவற்றுடன் இரானுக்கு எதிரான போட்டி சம நிலையில் முடிந்ததாலும், 4 புள்ளிகளை பெற்றுள்ளது.

இரானை வென்றதன் மூலம் 3 புள்ளிகள்ளைப் பெறும் போஸ்னியா ஹெறர்சகோவினா மூன்றாம் இடத்திலும், இரான் ஒரு புள்ளியுடன் கடைசி இடத்திலும் உள்ளன. (க)

## முகப்பு வயல் முருகனுக்கு இன்று தேர்த் திருவிழா

(மண்டைதீவு)

மண்டைதீவு முகப்பு வயல் முருகன் ஆலய வருடாந்த தேர் திருவிழா இன்று நடைபெறுகின்றது. முற்பகல் 11 மணிக்கு முருகன் பெருமான் தேரில் ஏறி ஆரோகனித்து வீதி உலா வருவார். (ந)

## ஆளும்...

கள் தாக்குதல் சம்பவங்களையடுத்தே மாகாணசபை உறுப்பினர்கள் தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பினைக் கோரியிருந்தனர் இருப்பினும் அந்தப்பொலிஸ் பாதுகாப்பும் விலக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு மாகாண சபையின் பேரவைச்செயலகத்தில் கடந்த மேமாதம் 16 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வினை நடத்தவிடாது தடுத்த பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்என்று கோரிக்கை விடுத்து அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்திடம் 16 உறுப்பினர்கள் கையொப்பமிட்டு கடிதம் ஒன்று சமர்ப்பித்துள்ள நிலையில் இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

## வட்டரக்க...

ருந்து வெளியேறிய உடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி கடத்தல் நாடகமொன்றை அரங்கேற்றியமைக்காக வட்டரக்க விஜித தேரருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

காவியுடை தரித்த சிலர் தம்மைக் கடத்தி தாக்கியதாக வட்டரக்க விஜித தேரர் முன்னதாக முறைப்பாடு செய்திருந்தார்.

பின்னர் தாமே காயங்களை ஏற்படுத்திக் கொண்டதாக ஒப்புக் கொண்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

காயங்களை தாமே ஏற்படுத்திக் கொண்டதனை மருத்துவ அறிக்கைகளும் உறுதி செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பலவந்தப்படுத்தி வட்டரக்கே விஜித தேரரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினையிலுள்ள நடராஜர் அம்மன் விக்கிரகங்கள் மண்டைதீவு சிவன் கோவிலுக்கு வழங்கப்பட வேண்டும்

## ஊர்காவற்றுறை நீதிபதி உத்தரவு

(ஊர்காவற்றுறை)

2003, 2005ஆம் ஆண்டுகளில் ஊர் காவற்றுறை நீதிமன்றத்தால் நயினாதீவு நாக பூஷணி அம்மன் கோவிலில் ஒப்படைக்கப்பட்ட நடேசர் மற்றும் அம்மன் விக்கிரகங்களை மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் கோவிலுக்கு ஒப்படைக்குமாறு ஊர் காவற்றுறை நீதிமன்ற நீதிபதி எஸ்.லெனின்குமார் நேற்று உத்தர விட்டார்.

மேற்படி இரண்டு விக்கிரகங் களும் தங்கள் கோவிலுக்கு உரி யவை என்று தெரிவித்து மண்டை தீவு தில்லேஸ்வரர் ஆலய பரிபா லன சபையின் தலைவர் இ.தில்லை நாதன், செயலாளர் ப.திருவருட் செல்வன், பொருளாளர் தி.இரகுநா தன் ஆகியோர் சட்டத்தரணி டாக்டர் தியாகர் திருநாவுக்கரசு ஊடாக மன் றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

மனுவை விசாரணைக்கு எடுத் துக் கொண்ட ஊர்காவற்றுறை நீதிபதி எஸ்.லெனின்குமார், குறித்த நடேசர் அம்மன் விக்கிரகங்களை மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன் ஆலயத்திற்கு ஒப்படைக்குமாறு நேற்று உத்தரவிட்டார்.

இதேவேளை நயினாதீவு நாகபூ ஷணி அம்மன் ஆலய அறங்காவ லர் சபைத்தலைவர் ஆ.தியாகராஜா வால் நடராஜர் அம்மன் விக்கிரகங் கள் இன்று காலை ஒப்படைக்கப்பட வுள்ளது. (ந)

## விபத்தில் சிக்கி...

இடம்பெற்றது.

இதில் முல்லைத்தீவு கரைத் துறைப்பற்று தண்ணீரூற்று மேற் கினைச் சேர்ந்த திருமதி குலேந்தி ரன் சிவகங்காதேவி (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார்.

அதே இடத்தினை சேர்ந்த செல் லையா கருணாகரன் (வயது 47) என்பவர் படுகாயமடைந்த நிலை யில் முல்லைத்தீவு மாவட்ட வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பாக தெரியவரு வதாவது, முள்ளியவளை பிரதேசத் தில் உள்ள வைத்திய சாலையில் இருந்து முல்லைத்தீவு நோக்கி புறப்பட்ட காருக்கு குறுக்கே திடீர் என மாடு பாய்ந்ததால் கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்தது.

அப்போது முல்லைத்தீவில் இருந்து முள்ளியவளை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளுடன மோதி விபத்துக்குள்ளானது.

இதில் படுகாயமடைந்த பிரஸ் தாப பெண் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரி ழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சடலமானது பிரேதப் பரிசோ தனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முல்லைத் தீவு பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர். (எ-11,267)

## இந்தியத்...

கையின் தூதுவராக நியமிக் கப்பட்டார்.

இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே பேராசிரியர் செனவிரட்ன நியமிக் கப்பட்டுள்ளார்.

1949ஆம் ஆண்டு பிறந்த சுதர்ஷன் செனவிரட்ன 'கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரா வார். (எ-11)

## ஐ.நா. விசாரணைக் குழு...

அமெரிக்கா கொண்டு வந்த தீர் மானம் ஜெனிவாவிலுள்ள ஐ நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அதன் ஆணையர் நவநீதம்பிள்ளை இந்த அறிவிப்பை நேற்று புதன் கிழமை வெளியிட்டுள்ளார்.

இந்த மூவரும், இலங்கையின் உள்நாட்டுப் போரின் கடைசி சில ஆண்டுகளில் இடம் பெற்றதாக கூறப்படும் மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க வுள்ள ஐ.நா. மனித உரிமை குழு வுக்கு, ஆலோசனை வழங்கவும், ஒத்துழைப்பு அளிக்கவும் உடன்பட் டுள்ளனர் என்று ஐ.நா. வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பு கூறுகிறது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யத்தால் அமைக்கப்பட்டுள்ள விசா ரணைக் குழு இலங்கை அரசு மற் றும் விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் இழைக்கப் பட்டதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்தும் என்று ஏற்கெனவே ஐ.நா. அறிவித்துள்ளது.

இலங்கை அரசு மற்றும் மக் களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்கா விட்டாலும், தடைகளை மீறி இந்த விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும் நேற்று வெளியிடப்பட் டுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய செய்திக் குறிப்பு கூறு கிறது. (எ-11)

## வடக்கின் பொருளா...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கான சுவிஸ்சர்லாந்தின் தூதுவர் தோமஸ்லிட் செருடனான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந் திருந்தனர். யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இந்தக் குழுவினர் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது வாசஸ்தலத்தில் பிற் பகல் 2.00 மணியளவில் சந்தித்து கலந்துரை யாடினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக முதலமைச் சரின் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாணத்தில் இதுவரை காலமும் பலவிதமான செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்தி வந்தபடியாலும் அவை விரைவில் முடிவுக்குவர இருப்பதாலும் தொடர்ந்து தாம் இப்பேர்ப்பட்ட செயற்றிட்டங்களில் இறங்க வேண்டிய கடப்பாடு தமக்கு நம் மத்தியில் இருக் கின்றதா என்பது பற்றி ஆராய்வதற்காகவும் தற்போதுள்ள நிலை என்ன? எப் பேர்ப்பட்ட பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கி இருக்கின் றோம் என்பது பற்றியெல்லாம் ஆராய்வதற் காகவும் வந்திருந்தார்கள்.

வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்களின். பிரதேசமாக இதுவரை காலமும் இருந்து வந்ததென்பதையும் நடுவிலே சிங் களக் குடியேற்றங்களை முன்னிறுத்தி வடக் கும் - கிழக்கும் தொடர்ச்சியாக தமிழ் பேசும் மக் களின் இடங்களாக இருக்க வில்லை என்ற கருத்தை முன்வைப்பதற்காக 450 குடும்பங் களை தெற்கிலிருந்து கொண்டு வந்து குடி யேற்றி உள்ளார்கள் என்பதையும் அங்குள்ள மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்கள் அந்தத் தொழிலை பராம்பரியமாக செய்த விதத்திலே செய்ய முடியாமல் அவர்களைத் தடைசெய்து தெற்கி லிருந்து வந்தவர்கள் தடைசெய்யப் பட்ட முறைகளிலே அந்த மீன்பிடித் தொழிலைச் செய்வதற்கு 'எவ்வாறு அனுசரணைகள் இராணுவத்தினரால் வழங்கப்படுகின்றன என்பது பற்றி எடுத்துக்காட்டி இது ஒரு முக் கியமான விடயம் என்று எடுத்துக் கூறினேன் என்று முதலமைச்சர் அலுவலகம் விடுத் துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (எ-6)

## கொடி...

துப்பாக்கி ரவைகள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என கொடிகாமம் பொலி ஸார் தெரிவித்தனர். விவசாய நடவடிக்கைக் காக வெற்றுக் காணி ஒன்றைத்துப்புரவு செய்த போது வெடி பொருள் களைக் கண்ட காணி உரிமையாளர்இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அங்கு சென்ற பொலி ஸார் ஆயுதங்களை மீட்டுள்ளனர். அவை பாதுகாப்பான முறை யில் கிறீஸ் பூசப்பட்டு புதைத்து வைக்கப்பட்டி ருந்தன எனவும் பொலி ஸார் தெரிவித்துள்ள னர். (எ-6)


இலங்கை நிர்வாக சேவை SLAS மட்டுப்படுத்தப்பட்ட திறந்த போட்டிப்பரீட்சைக்கான வகுப்புக்கள்

துறைசார் விரிவுரையாளர்களினால் இவ்வருடம் மாற்றி அமைக்கப்பட்ட புதிய பாடத்தின் கீழ் விரிவுரைகள் நடைபெறும்.

விரிவுரைகள் ஆரம்பம் – 28.06.2014 – 1 மணி

இலங்கை கணக்காளர் சேவை (SLACS)

பிரிவு II க்குரிய விரிவுரைகள்

ஆரம்பம் – 28.06.2014 காலை 9 மணி

புதிய உயர் கல்லூரி – ஆரிய குளம் யாழ்ப்பாணம்.

☎ 021 222 8148

(C-7746)





வெறும் 30,000/= மட்டும் முதலில் செலுத்தி

UK, Switzerland, New Zealand Australia, Malaysia, Singapore

மாணவர் விசா & வேலைவாய்ப்பு




* முழுநேர / பகுதிநேர வேலைவாய்ப்புடனான கற்கைநெறி ஏற்பாடுகள்.
* உல்லாச நட்சத்திர விடுதிகளில் அதிக வருமானத்துடன் வேலைவாய்ப்பு

Front Office Manager, Guest Service Officer, Stores Manager and More......

(C-7748)

Sikaram

மேலதிக விபரங்களுக்கு

இல.153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

0777 324 004, www.sikaram.lk



சிறுநீரகம் தேவை

B⁻ குருதியின சிறுநீரகம் தேவை

தொடர்பு :- 077 899 9994, 077 679 1028

(6955)



IELTS Special Class

செப்ரெம்பர் 06ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு காலை 8.30 தொடக்கம் 11.30 வரை திங்கள் தொடக்கம் வியாழன் வரை காலை 7 மணி முதல் 8.30 மணி வரை மாலை 5 மணி தொடக்கம் 7.30 மணி வரை நடைபெறும்.

வகுப்புக்கள் ஆரம்பம் 02.07.2014

More Than 10 Years Experience

Extended Speaking practice

We are "IELTS" Registration center fr british Council"

THIS IS NOT A CONVENTIONAL IELTS CLASS WHERE YU DO PAPERS AND TEACHER GIVES ANSWER KEY. BUT IT IS AN INNOVATIVE TRINNING PRGRAM WHICH HAS HELPED MY STUDENTS TO TOUCH BANDS 8 & 8.5

(6938)

BRITISH COLLEGE OF ENGLISH

# 192, Navalar Road, Jaffna. Tel: 021 222 0384 / 0778803887



FALC FRENCH LANGUAGE CENTRE REGISTERED FRENCH CENTRE.

FRENCH CLASSES

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்....
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம்......

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: தரமான ஆசிரியரை தெரிவு செய்து பணம், நேரத்தை விரயமாவதை தவிருங்கள்.
எம்மிடம் கற்ற அதிகமானோர் France, Canada வில் வேலை செய்கிறார்கள்...

| | | |
|---|---|---|
| ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்) | ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி. | 021 320 2973 0779 789 456 |



G.A.Q பேராதனைப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)

மார்கழி மாத பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் விரிவுரைகள்.

ஆரம்பம் – 28.06.2014 காலை 8 மணி

விபரங்களுக்கு – S. அருள்நங்கை (நிர்வாகி)

புதிய உயர் கல்லூரி

ஆரிய குளம் சந்தி

யாழ்ப்பாணம்

(C-7746)






பதவி வெற்றிடங்கள்

எதிர்காலத்தை வெற்றிகொள்ள நிரந்தர தொழில் வாய்ப்புகள்

வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பல்வேறுபட்ட பதவி வெற்றிடங்கள், கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட & உணவு வசதிகள் உண்டு.

அடிப்படைத் தகைமை O/L.

அனைவரது வாழ்வும் ஒளிமயமாக இன்றே அழையுங்கள்

0777 981 471, 021 320 3687

(C-7750)



முதலாமாண்டு நினைவஞ்சலி



திருமதி தவராசா சந்திரா

தோற்றம் 12.12.1952 மறைவு 07.07.2013

ஆண்டுத் திவசம் 26.06.2014



உலகில் எம் ஒளி விளக்காய்
ஒளிர்ந்த தாயே – இகவுலகை
விட்டேகி ஓராண்டு ஓடிமறைந்ததம்மா
உன் நினைவால் வாடும் நீ தந்த
உறவுகளின் துயரதனைத் துடைக்க
நம் நந்தவனத்தில் வந்து
தழைத் தருள்வாய் தாயே
நாம் நினைந்திருக்க

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

பாரதி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

(6952)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.